Registered as a Newspaper
பக்கங்கள் 6
விலை ரூபா 5.00

ஈழநாதம்

THE EELANAATHAM · மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 · திருவள்ளுவர் ஆண்டு 2025 · கார்த்திகை 06 · 22-11-94 · செவ்வாய்க்கிழமை · ஓசை 277

சகல பாடசாலை மாணவர்களுக்கும் உணவு முத்திரை வழங்க ஏற்பாடு

உத்தியோகத்தர்கள் மற்றும் இடம்பெயர்ந்தோரின் பிள்ளைகளுக்கும் மாணவர் உணவு முத்திரைகள் வழங்கப்படவுள்ளன. வடக்கில் இதுவரை காலமும் 750 ரூபா விற்கு மேற்பட்ட வருமானங்களைப் பெறும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு மாணவர் உணவு முத்திரைவழங்கப்படவில்லை, இதேபோல் இடம்பெயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கும் முன்னர் வழங்கப்பட்டு வந்த மாணவர் உணவு முத்திரை ளும் இடைநிறுத்தப்பட்டிருந்தன. தற்போது, 'உ', இ' [6ஆம் பக்கம் பார்க்க]

இடைக்கால வரவு செலவு திட்டத்தில் ஆயுதப்படைக்கு அதிகளவு நிதி

சந்திரிகா அரசு இன்று சமர்ப்பிக்கும்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தலைமையிலான அரசாங்கம் இன்று தனது இடைக்கால வரவுசெலவுத் திட்டத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுளளது இவ் வரவு செலவுத் திட்டத்தில் இராணுவச் செலவினத்திற்கென 566 கோடி ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது. இச்செலவிடானதுபுனர்வாழ்வு அமைச்சு மற்றும பொது நிர்வாக அமைச்சு ஆகியவற்றிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிகளைவிட உயர்ந்தளவானதாகும எனவும் தெரியவருகின்றது

இன்று சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத் திட்டத்தின் மொத்தச் செலவீடு 4516 கோடி ரூபா வாகும். இதற்கான நிதி,திரட்டிய நிதியில் இருந்து பெறப்படவுளளது.

இவ் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவிற்கென 566 கோடி ரூபா ஒதுக்கப்படவுள்ளது. பாதுகாப்பிற்காகவே இவ் வரவு செலவுத் திட்டத்தில் அதிகஅளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதில் 370 கோடி ரூபா இராணுவ நடவடிக்கைகளுக்காகவும், 140 கோடி ரூபா விமான, கடற்படைகளுக்கும் பாதுகாப்பு அமைச்சுக்கு 56 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இது தவிர நிதி அமைச்சிற்கு 234 கோடி ரூபாவும், புனர்வாழ்வு அமைச்சிற்கு 150 கோடி ரூபாவும் பொது நிர்வாக அமைச்சிற்கு 390 கோடி ரூபாவும், சக்திவள அமைச்சிற்கு 130 கோடிரூபாவும் இந்த இடைக்காலவரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

[6-ம் பக்கம் பார்க்க]

தலைவரின் பணிப்பில் 33 கைதிகள் விடுதலை

மேலும் ஏழு பேருக்கு தண்டனை குறைப்பு

தமிழீழ மாவீரர் வாரத்தையொட்டி தமிழீழ தேசியத் தலைவர் வே. பிரபாகரனின் பணிப்பின் பேரில் பல்வேறு குற்றச்செயல்களில் ஈடுபட்ட 33கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கி நேற்று தமிழீழக் காவல் துறையினர் விடுதலை செய்துள்ளனர்.

மேலும் ஏழு கைதிகளுக்கு தண்டனைக் காலம் குறைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை தமிழீழக் காவல் துறையினரின் பழைய பூங்காவில அமைந்துளளபணிமனையில் வைத்து தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் பத்திரிகையாளரிடம் இந்தகவலைத் தெரிவித்தார்.

நேற்றைய தினமே கைதிகள விடுதலை செய்யப்பட்டு அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களின குடும்பப் பின்னணியின்அடிப்படையிலேயே [6-ம் பக்கம் பார்க்க]

மாவட்ட இணைப்பதிகாரிகளை ஹமில்டன் சந்தித்துப் பேச்சு

(கொழும்பு)

கடந்த வாரம் பாதுகாப்பு அமைச்சின்செயலாளர் ஜெனரல ஹமில்டன் வணசிங்க மாவட்ட பாதுகாப்புஇணைப்பதிகாரிகளை சந்தித்துப் பேசியுள்ளதாக சண்டே டைம்ஸ் பத்திரிகை தெரிவிக்கின்றது.

விடுதலைப புலிகள் மாவீரர் வாரத்தில் நடத்தக்கூடிய தாக்குதல் குறித்தும் போர் நிறுத்தம் குறித்தும் ஹமில்டன் வணசிங்க அதன்பின்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்துப் பேசியதாகவும் அறிவு தெரிவிக்கப்படுகிறது, ஜனாதிபதியுடனான சந்திப்பிறகு சில மணி நேரத்திற்கு முன்பாகவே ஹமில்டன் வணசிங்கமாவட்ட இராணுவ இணைப்பதிகாரிகளை சந்தித்ததாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

புலிகளுடனான பேச்சுவார்த்தையில்

இராணுவத் தரப்பில் எவரும் இடம்பெறாமை பற்றி கவலை

அரசு சகல விதமான உறுதிமொழிகளை அளித்தபோதும் இராணுவம் அரசு யுத்த நிறுத்தத்தை அறிவித்து விடலாம் என தொடர்ந்து இன்னமும் அஞ்சுவதாக சண்டேடைம்ஸ் பத்திரிகை குறிப்பிடுகின்றது. அத்துடன்பலமூத்தஇராணுவ அதிகாரிகள் விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுகளை நடத்தும் அரச தரப்பு குழுவில் இராணுவ தரப்பு அதிகாரி ஒருவர் இடம் பெறாமைகுறித்து கவலை தெரிவித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் தமது தரப்பில கரிகாலனை நியமித்துள்ளனர். இவர் மூத்த இராணுவ தரப்புஉறுப்பினர் இராணுவ சம்பந்த மான பேச்சுகள் நடைபெறும் போது இது புலிகளுக்கு சாதகமானதாயும் அரச தரப்பிற்கு பாதகமானதாயும் அமைந்துவிடும் என்றும் அந்த மூத்த இராணுவ அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

தமிழீழ மாவீரர் நாள் நிகழ்வுகள் நேற்று எழுச்சியுடன் ஆரம்பம்

[நமது நிருபர்]

ஏறுதுபார் கொடியேறுது பார் என்ற பாடல் இசைக்க தமிழீழ தேசியக்கொடி ஏற்றலுடன் தமிழீழ மாவீரர் வாரம் நேற்று காலை 9.00 மணிக்கு ஆரம்பமானது.

யாழ், மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பரவலாக பாடசாலைகள், கல்வித் திணைக்களங்கள், வங்கிகள் உட்பட அனைத்து அரச அலுவலகங்களிலும் விடுதலைப் புலிகளின் பாசறைகள் விடுதலைப் புலிகளின் அலுவலகங்கள் மற்றும் சனசமூக நிலையங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்திலும் காலை 9 மணிக்கு தமிழீழ தேசியக்கொடி ஏற்றப்பட்டது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் அலுவலக ஊழியர்கள், போராளிகள் ஆகியோர் குழுமி நின்று தமிழீழ தேசியக்கொடி வணக்க பாடலை இசைக்க தமிழீழ தேசியக் கொடியானது காற்றினிலே ஆடி அசைந்து உயர்ந்து பட்டொளி வீசிப் பறந்து கொண்டிருந்தது.

மாவீரர் வாரத்திற்கு முற்பட்ட வாரமான மாவீரர் எழுச்சி வாரத்தில் யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள வீதிகள் அனைத்தும் பொதுமக்களாலும் தொண்டர் நிறுவனங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களாலும் சிரமதான அடிப்படையில் துப்புரவு செய்யப்பட்டு இரவோடு இரவாக மஞ்சள், சிவப்பு நிற வர்ணங்களால் அலங்கரிக்கப்பட்டு புதுப்பொலிவு பெற்றிருந்தது

வீதிகளின் பிரதான சந்திகளில் மிகப்பிரமாண்டமான [6-ம் பக்கம் பார்க்க]

தான்வாழும் மண்ணின் வாழ்வுக்காக தியாக வேள்வி நடத்திய மாவீரர்கள்

மாவீரர் வாரத்தையொட்டி கடற்புலிகள் அரசியற்துறை செய்தி

தான் வாழும் மண் ஆயிரமாயிரம்ஆண்டுகள் மட்டுமல்ல ஊழிக்காலம் வரை வாழ வேண்டும் என்பதற்காக தம்மை பசுமித்த தியாகவேள்வி நடாத்தி மாவீரர் ஆனவர்கள் தான் எமது மாவீரர்கள்.

இவ்வாறு மாவீரர் வாரத்தை யொட்டி கடற்புலிகளின் அரசியல்துறை விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுளளது.

அச் செய்தியில் மேலும்:

ஒவ்வொருமனிதனும் தான் இறந்த பின் தனது உடம்பு கௌரவமாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்று தான் விரும்புவான். ஆனால் கரும்புலிகளோ எமக்கு உடம்பும் வேண்டாம் - உயிரும் வேண்டாம் என்று தமதுஉடலையே பொடிப்பொடியாக்கி எதிரியுடன் மோதிப் புதியநானூறு [6-ம் பக்கம் பார்க்க]

புலிகளுடனான சமாதான பேச்சிற்கு தோற்கடிக்க முடியாமையே காரணம்

சண்டேடைம்ஸின பாதுகாப்பு செய்தியாளர்

[கொழும்பு]

தம்மை இராணுவ ரீதியாக முறியடிக்க முடியாது என்பதை தென்னிலங்கை அரசியல்வாதிகள் உணர்ந்ததாலேயே அவர்கள் இப்போது சமாதானத்தை இரந்து கேட்கின்றனர் என்பது விடுதலைப் புலிகளுக்கு தெரியும். விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியாக அழிக்கப்படுவார்களேயானால் அரசியல்வாதிகள் அவர்களிடம் சென்று பேசுவோம் வாருங்கள், சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்போம் என்று பிச்சை கேட்கமாட்டார்கள் இவ்வாறு சண்டே டைம்ஸின் பாதுகாப்புத்துறை செய்தியாளர் தனது கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் மரபு வழி ரீதியிலான போரை மேற்கொள்ளமாட்டார்கள் என்ற முடிவுக்கு இராணுவம் வந்தபினபும் கூட இராணுவம் தனது மாபுவழி போரிலிருந்து மரபுவழியற்ற பேசார் முறைக்கு தன்னை மாற்றும் கொள்கை மாற்றத்தை மேற்கொள்ளவில்லை. கெரில்லா கிளர்ச்சி ஒன்றிற்கு எதிரான போராட்டத்தில் நிலைமைக் கேற்ப மாறல் என்ற நோக்கு [6-ம் பக்கம் பார்க்க]

தொண்டமானை வெளியேற்ற சிரேஷ்ட அமைச்சர்கள் முயற்சி

(கொழும்பு)

தொண்டமானை அரசாங்கத்தில் இணைத்தும் பெரியளவிலான அரசியல இலாபம் கிடைவில்லை என்பதால். ஊழல மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களை அவர் முன்னைய ஆட்சியில் செய்தார் என நிரூபித்து, அவரை பதவியிலிருந்து அகற்ற முயற்சிகள் நடப்பதாக ஹிரு பத்திரிகை தெரிவித்துள்வது.

தொண்டமானை கபினட் பொறுப்புள்ள அமைச்சராக நியமித்துள்ளமை, பொதுஜன ஐக்கிய முன்னணிக்குள் பலத்த சர்ச்சையை தோற்றுவித்துள்ளதால் தொண்டமா வின் மேலுள்ள ஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களை காரணம் காட்டி அவரை வெளியேற்றிவிட அரசாங்கத்திலுள்ள சில சிரேஷ்ட அமைச்சர்களே முயல்வதாகவும ஹிரு பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

தொண்டா அமைச்சரானால் எனக்கு வழங்க தயக்கமேன்

சந்திரசேகரன் கேள்வி

(கொழும்பு)

தொண்டமானுக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட முடியுமானால் தமக்கு ஏன் அமைச்சர் பதவி வழங்கப்படக்கூடாது என்று தமது கட்சியினர் தம்மைக் கோருவதாக பிரதி அமைச்சர் சந்திரசேகரன் ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவிடம் கேள்வி எழுப்பியுளளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,மலையக மக்கள் முன்னணி அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை மீளப் பெறும்படி தம்மைவற்புறுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அரசை அமைப்பதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எந்த வதமான நிபந்தனையும் இல்லாமல் ஆதரவு வழங்கியதை தாம் மறக்கவில்லை எனவும் ஆறு மாதங்களில் அமைச்சரவை மீள மறுசீரமைக்கும் போது இவ் விடயம் கவனிக்கப்படும் என்று ஜனாதிபதி திருமதி சந்திரிகா வாக்குறுதி வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

தலையை வெட்டியதற்கு ராணுவம் விசித்திர விளக்கம்

(கொழும்பு)

லெப்,கேணல் மல்லி முக்கியமான ஒரு போராளி என்பதால் அடையாளம் காணும் பொருட்டு அவரது தலை வெட்டி எடுக்கப்பட்டதாக இராணுவ அதிகாரிகள் சிலர் தமது செயலை நியாயப்படுத்தியுள்ளனர்

இத்தகவலை நேற்றுமாலை வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது இதேவேளை லெப் கேணல் மல்லி கொலையுண்ட சம்பவம் பற்றி பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற விடுதலைப் புலிகள் விடுத்திருக்கும் கோரிக்கை சமாதான முயற்சிகளில் மற்றுமொரு (6ஆம் பக்கம் பார்க்க)

படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவைஇன்றுவழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

யுத்தம் உறுதியாகிவிட்டது

(கொழும்பு)

சங்குப்பிட்டிப் பாதையை பொது மக்களின் போக்குவரத்திற்கு திறப்பது என்பதும், யுத்த நிறுத்தம் ஒன்று வருவது என்பதும் இப்போது நிச்சயமற்றவையாகி விட்டன என பேட்ரம் பஸ்தியாம்பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில், நீண்ட காலமாக பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களின் நம்பிக்கைகள் மிகக் (6ஆம் பக்கம் பார்க்க)

மூன்று ஹெலிகள் கொழும்பு வந்தன

(கொழும்பு)

சிறிலங்கா அரசால் கொள்வனவு செய்யப்பட்ட ரஷ்ய தயாரிப்பான மூன்று எம். ஐ. 17 ரக உலங்குவானூர்திகள் கடந்த வாரம் கொழும்பு வந்து சேர்ந்ததாக கொழும்பு பத்திரிகை தெரிவிக்கிறது.

இராணுவத்திற்குத் தேவையான பொருட்களை விநியோகிக்கவென இவ் உலங்குவானூர்தி பயன்படும் என மேலும் தெரிவிக்கப்படுகிறது

வரி விளம்பரம்

விசேட கழிவு

இலகு தோசைமா, இட்டலிமா, அப்பம் மா ஆகியவற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன் கூட்டியே ஒழுங்கு செய்து விசேட கழிவைப் பெற்றுக் கொள்ளுங்கள் தொடர்பு: சகல அன்னா தொழிலகங்களிலும் (சி-10676)

தொடர்புகொள்ளவும்

திரு. சுப்பையா ஞானேஸ்வரன் என் தம்பியே! உன்னைக் காணாமல் அம்மா கடும் சுகவீனமுற்று இருக்கிறா. உடன் வந்து ஆறுதல் தரவும், உன் தங்கை சின்னத்துரை விஷ்ணுதேவி, காராவளவு: அல்வாய் கிழக்கு அல்வாய் (10158)

11-11-94 முதல்வியாழ மாற்ற பலன்கள்

ரூ 10/- சதயாவின் வியாழ மாற்றம் எங்கும் கிடைக்கும் பாடசாலை புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், உபகரணங்கள், வெள்ளைத்தாள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்குமிடம்: சுரேகா புத்தகநிலையம் பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (10143)

"மரக்கன்றுகள்"

பலாக்கன்று, ஆசனிப்பலா, நெல்லிக்கன்று, கஜூ மரக்கன்று, பாம்ஓயில்கன்று மற்றும் மலைவேம்ப, மூலிகைக் கன்றுகளும் எம்மிடம் விற்பனைக்குள்ளன.

(சி/10753) "மிக்கவெற்"

தவறிவிட்டது

சந்தப்பு அம்பலவாணர் (இல:-330801581V)நவமணி சந்தப்பு (இல:-506660327V) ஆகிய இருவரது தேசிய அடையாள அட்டைகள் சிட்டிவேரம் கண்ணகை அம்பாள் ஆலயத்திற்கும் கொடிகாமம் சந்தியூடாக புத்தூர்ச் சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கொடிகாமம் ஸ்ரீமுருகன் களஞ்சியத்தில் ஒப்படைக்கவும். (10167)

தனியார் கல்வி நிறுவனஒன்றியம் யாழ். கோட்டம்

★ அறிவித்தல் ★

24-11-94 வியாழக்கிழமை மாவீரர் நினைவுநாள் விழா நடைபெறவுள்ளது. அன்றையதினம் மாலை நேர வகுப்புகள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகிறேன்.

செயலாளர்
யாழ் கோட்டம்.

(சி/10752)

3-ம் ஆண்டுநினைவலைகள்

வீரவேங்கை
பெரியதம்பி,-பேரழகன்
(தங்கவேல் தங்கேஸ்வரன்)

பிறப்பு	வீரச்சாவு
17,04,1974	22.11.1991

மலையில் உருவாகும் மேக மூட்டங்கள்
எம்மனதில் உருவானதோ
நதியில் உருவாகும் நீரின் ஓடங்கள்
எம் விழியில் உருவானதோ
பன்னீர் பூவோடு தென்றலும் கொஞ்சிட
பார்த்திருந்தேன் மனம்
களித்திருந்தேன்
என் வயிற்றில்
அருமையாய் பூத்த வீரத்திருமகனே
எம் ஈழ விடுதலைக்காய்
உன் உயிர் தந்தாயோ
நீ சிந்திய குருதியில் ஆயிரம்
பூக்கள் மலர்கின்றது
நாளை தமிழ் ஈழமாய் மலர்கின்றது

சமரபாகு
கம்பர் சோலை
வல்வெட்டித்துறை

உன்பிரிவால் துயருறும்
தாயார்.
உற்றார், உறவினர்கள்

தற்போதைய முகவரி;-
மகாலிங்கம் ஆசிரியர் வாடி,
கல்பொல்லை வீதி,
சரவெட்டி வடக்கு,
நெல்லியடி

(10160)

31.ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

2 ம் வருட நினைவஞ்சலி

பெருந்திறன் சான்றோன்
திரு. சான்டோ M. துரைரத்தினம்

பிறப்பு	இறப்பு
25.9-1939	23.10.1994

திதி 22 . 11 . 94

திருமதி
து. நித்தியானந்தமங்களம்
(பேபி அக்கா)

பிறப்பு	இறப்பு
4.10.1940	12.12.1992

அம்மா அப்பா ஆனவரே
ஆடை அணிகள் அளித்தவரே
இனிய உணவும் தந்தீரே . . . உங்களுக்காய்
ஈசன் பாதம் தொழுகின்றோம்.

அன்புக் குழந்தைகள் நாம்

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(10164)

நினைவு கூருகின்றோம்...

22. 11. 1994

1986-ம் ஆண்டு இதேதினத்தில் ஒட்டிசுட்டான் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய,

பிரதேச படைத்தளபதியான,

★ **சந்திரன் - ஸ்ரீபன்** (செல்வநாயகபுரம் - திருமலை)

பிரதேச உதவிப்படைத் தளபதியான,

★ **தியாகு டேவிட்** (முருங்கன் - மன்னார்)

மன்னாரில் சிறிலங்கா இராணுவத்தினரால் கைதாகி கொலைசெய்யப்பட்டு எமைப்பிரிந்த,

மதன் (சேகர் - மன்னார்)

1987-ம் ஆண்டு சாவகச்சேரி பேருந்து நிலையத்தின்மீது இந்திய விமானப் படையினர் மேற்கொண்ட தாக்குதலின் போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

அசோக் - யூட் (மயில்வாகனம் சந்திரசேகர் - அம்பனை, தெல்லிப்பழை - யாழ்)

1988-ம் ஆண்டு கைதடிப்பாலத்தில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

துர்க்கா - பரதர் (பரஞ்சோதி சுகுமார் - நாவற்குழி - கிழக்கு - யாழ்

வவுனியாவில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

பூலோகசிங்கம்

பாவற்குளம் - 4ம் படிவம் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

ந. பாலகுரு

1990 ம்- ஆண்டு மாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலின் போது வீரச்சாவெய்திய,

2-ம் லெப். அலன் (செபஸ்ரியான் கமலலோஜன் - உடப்பு - புத்தளம்)

தமிழ்ச்செல்வி (சுமங்களா சதாசிவம் - அக்கரைப்பற்று - அம்பாறை)

2-ம் லெப். டெனி (நடராசா உருத்திரமூர்த்தி - நொச்சிக்குளம் - பன்குளம் - திருமலை)

லோகன் (இரத்தினசிங்கம் புவனேந்திரன் - கிளிவெட்டி, மூதூர் - திருமலை)

கப்டன் வதனன் (தங்கராசா ராஜேஸ்வரன் - குமுழமுனை - மணலாறு)

2-ம் லெப். அருணா (அந்தோனிப்பிள்ளை விஸ்வராஜ் - அளம்பில் - மணலாறு)

2-ம் லெப். நிராஜ் (செல்லத்துரை சிவனேசச்செல்வன் - நெடுங்கேணி - மணலாறு)

2-ம்லெப்.மகான் (பாலசுந்தரம் பாலவரதன் - முள்ளியவளை - முல்லைத்தீவு)

டயானா (கவிதா தங்கராசா - குகன்தோட்டம், அளம்பில் - மணலாறு)

பெனாசிர் (ஜமுனா சிவபாதலிங்கம் - 5-ம் கட்டை அளம்பில் - மணலாறு)

அன்பழகன் (மாயாண்டி பாலகிருஷ்ணன் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

தனராஜ் (சி. ஆனந்தராஜ் ஒட்டி சுட்டான் - முல்லைத்தீவு)

பிரதீப் (- ஆனந்தராஜ் மணற்குடியிருப்பு - முல்லைத்தீவு)

கரன் (ச. நவரத்தினம் - அளம்பில் - மணலாறு)

ரமணன் (ஜோசப் ஜெயரட்ணம் - பிரமந்தனாறு - விஸ்வமடு)

ரூபன் (சிவசாமி குமாரவேல் - விஸ்வமடு)

மேஜர் திலீப் (அழகுரத்தினம் விக்கினேஸ்வரன் - கனகராயன்குளம், ஓமந்தை-வவுனியா)

கப்டன் றஜனி (பரமேஸ்வரி சங்கரப்பிள்ளை - அலைக்கல்லுப்போட்டகுளம்- வவுனியா)

2-ம் லெப்.ஜஸ்ரின் (மாணிக்கம் மானில்-கல்மடு,புளியங்குளம் - வவுனியா)

நிர்மல் (சந்திபாட் பிள்ளை சுஜிந்திரருபன் - நேரியகுளம் - வவுனியா)

இராகவன் (பழனியாண்டி செல்வராசா - இறம்பைக்குளம்-வவுனியா)

டெனி (நாகமணி குருகுலகுமார் - பூவரசங்குளம்- வவுனியா)

கோணேஸ் (பேபிசகிலா சுப்பையா - பாரதிபுரம்- கிளிநொச்சி)

லிங்கம் (முத்துலிங்கம் சோதிவேல்-வட்டக்கச்சி- கிளிநொச்சி)

துஸ்கர் (கிருஷ்ணசாமி இலட்சுமணன்-மயிலங்காடு- கிளிநொச்சி)

அர்ச்சுனா (மயில்வாகனம் ரவி - பாரதிபுரம்- கிளிநொச்சி)

கண்ணன் (சுப்பையா தேவர் துரைராசா -பொன்நகர்-கிளிநொச்சி)

விசு (வேலுசித்திரகுமார்-2-ம் வாய்க்கால்-கிளிநொச்சி)

கப்டன் டோறா (பத்மாவதி கந்தப்பு-உச்சிஓழுங்கை, சரவெட்டி-யாழ்)

2-ம் லெப்.சுபோ (சுமதி கந்தையா-மட்டுவில் வடக்கு - சாவகச்சேரி)

2-ம் லெப்.இலக்கணா (பிறேமினி பாலச்சந்திரன்- நுணாவில் கிழக்கு, கல்வயல்-சாவகச்சேரி)

2-ம் லெப்.வைதேகி (சிதாலட்சுமி சின்னத்தம்பி- -புலோலிமேற்கு, தம்பசிட்டி-பருத்தித்துறை)

2-ம் லெப்.கிரிஜா (இரத்தினவதி சுந்தரம் - கேணியடி, கரணவாய்மேற்கு-சரவெட்டி-யாழ்)

2-ம் லெப்.பொன்னி (பிரமிளா செல்வமாணிக்கம்-பொலிகண்டி-வல்வெட்டித்துறை)

மரிஸ்ரெலா (ஜெனோ பிரான்சிஸ் - வெற்றிலைக்கேணி - வடமராட்சி கிழக்கு)

விக்டோரியா (புஸ்பராணி அன்ரன் - மயிலிட்டி, காங்கேசன்துறை-யாழ்)

ரசிக்கா (யாழினி சத்தியநாதன்-மகேந்திரன் வீதி, அரியாலை-யாழ்)

கோமகள் (சித்திரா சின்னத்தம்பி-கப்பூது, சரவெட்டி - யாழ்)

பிரபு (- - -)

1991-ம் ஆண்டு வவுனியா செட்டிகுளம் பகுதியில் நிகழ்ந்த சிறிலங்கா இராணுவமுகாம் காவலரண்கள் தகர்ப்பின் போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய,

கப்டன் பிரபா (செல்வரட்ணம் செல்வகுமார்- சங்கத்திணைக்களவீதி-முல்லைத்தீவு)

தங்கன் (செல்வரட்ணம்கருணாகரன்-சங்கத்தார்வயல் இயக்கச்சி,கிளிநொச்சி)

ஆனையிறவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட எறிகணை வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

குலேந்திரன் (கார்த்திகேசு சசிசரன்-கரம்பைகுறிச்சி வரணி-கொடிகாமம்)

பெரியதம்பி-பேரழகு (தங்கவேல் தங்கேஸ்வரன்- சமரபாகு-வல்வெட்டித்துறை)

1993 ஆம் ஆண்டு அளவெட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

கப்டன் வெள்ளை-நியூட்டன் [செல்வநாயகம் சசிகரன் - புன்னாலைக்கட்டுவன் வடக்கு]

லெப். கதிரவன் கிரிமாமா [சின்னையா சிவராசா - அல்லிப்பளை - பளை]

பூநகரி-நாகதேவன்துறை இராணுவக் கடற்படைக் கூட்டுத் தளம் மீது 'ஒப்பரேசன் தவளை' நடவடிக்கையின்போது விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய

கப்டன் விடுதலை ஜின்னா [கலாலட்சுமி கணபதிப்பிள்ளை- ஆலங்கேணி, பூநகரி-மன்னார்]

யாழ் மாவட்டத்தில் 21.11-93 அன்று ஏற்பட்ட வாகன விபத்தில் விழுப்புண்ணடைந்து வீரச்சாவெய்திய -

நிருபன் [அருளானந்தம் அரவிந்தன் - ராசவீதி, சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி - யாழ்]

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும், கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினரால் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

★ இக்குறியிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-10751)

---

31 ஆம் நாள் நினைவலைகள்

பருத்திநகர் பெருந்திறல் சான்றோன்

சாண்டோ எம். துரைரத்தினம்

அவர்களுக்கு எமது நினைவுப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்

வட்டுக்கோட்டை பிளவத்தை
நன்மை விருத்திச் சங்கம்

(10165)

முதலாமாண்டு நினைவுப்பூக்கள்

திருமதி கந்தையா நாகம்மா

மண்ணில்	விண்ணில்
1912.09.10	1993.12.03

திதி- 22.11.1994

ஆண்டொன்று நான்றதுன் அன்பாம் முகம்மறைந்து ஈண்டுன் நினைவுகளால் வாடுகிறோம் - பூண்டபெருங் கொள்கையுடன் வாழ்ந்திருந்த குலமகளே எம்தாயே வாழ்க இறை பதமினிதே வாழ்த்து!

இன்று எமது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.)

கச்சாய்வீதி,
சாவகச்சேரி,
22-11-1994.

குடும்பத்தவர்.

(10162)

கோட்டை ரயில்நிலையத்தில் தமிழ் பயணிகளிடம் திருட்டு

(தென்மராட்சி)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் தமிழ் பயணிகளிடம் பணம் திருடும் பேர்வழிகள் அதிகரித்துள்ளதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்தவெள்ளிக்கிழமைஇரவு வவுனியா நோக்கி வருவதற்கு நின்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு பெண்மணியிடம் 1500 ரூபா பணம் திருடப்பட்டதுடன் ஆண் ஒருவரிடம் பொக்கட்டில் இருந்த 1000 ரூபாவும் வேறு ஒருவரிடம் 38,000 ரூபாவும் திருடப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரயிலிலும் இத்திருட்டுக்கள் இடையிடையே இடம் பெறுவதால் சில பயணிகள் வெறுங்கையுடன் செலவுக்குப் பணம் இல்லாமல் திண்டாடும் நிலையும் ஏற்பட்டுள்ளது. (86)

விதை உருளைக்கிழங்கு பெறுவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து விதை உருளைக் கிழங்கை இங்கு தருவிப்பதில் ஏற்பட்ட கால தாமதத்தினால் பல விவசாயிகள் கவலைகொண்டுள்ளனர். யாழ்மாவட்டத்திற்கு தேவையான கிழங்கை தருவிப்பதற்கென கொழும்பு சென்ற கமநல சேவை திணைக்கள அதிகாரி ஒருவர் ஒருமாத காலமாகியும் இது குறித்த தகவல் எதையும் இங்கு அறிவிக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

ஒக்ரோபர் நடுப்பகுதியில் கிழங்கை கொண்டுவருவதாக சென்ற இவர் இன்னமும் அது குறித்த எந்தத் தகவலையும் தரவில்லை என விவசாயிகள் தரப்பில் கூறப்படுகின்றது.

வர்த்தகதுறை பாடங்கள் பரீட்சையில் புறக்கணிப்பு

யாழ். கல்வித் திணைக்கள அனுசரணையுடன் தற்போது நடைபெறும் க. பொ. த. உயர்தர வகுப்பிற்கான பொதுப் பரீட்சையில் ஆண்டு 13 இற்குரிய வர்த்தகதுறை பாடங்களில் ஒருவினாத்தாள் மட்டுமே வழங்கப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

இதனால் இம் முறைத் தவணையில் கற்பிக்கப்பட்ட பாடவிதானங்கள் முக்கியத்துவமில்லாமற் போன நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது என இதனோடு தொடர்புடையவர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழீழ நன்மைக்காகவே தொழிற்சாலை தேவை

கருத்தரங்கில் உரை

கைத்தொழில் சம்பந்தமாக எம்மால் முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் அனைத்தும் எமது சிறந்த கனவுகள். அவற்றை நனவாக்குதல் மூலம் நாம் வளமான தமிழீழத்தைக் கட்டியெழுப்ப வேண்டும். இவ்வாறு யாழ் பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித்திட்டங்களை இனங்காணல் ஆய்வுப் பட்டறையில் கைத்தொழில் சம்பந்தமான அமர்விற்கு தலைமை வகித்துப் பேசிய யாழ் பல்கலைக்கழக பொறியியல் பீட பேராசிரியர் திரு. வே. நவரத்தினராசா அவர்கள் கூறினார்.

காங்கேசன் துறை சீமெந்துத் தொழிற்சாலை எமது மூலவளத்தை சுரண்டும் ஒன்று எனவும் எதிர் காலத்தில் பல தொழிற்சாலைகள் புனரமைக்கும் பொழுது அவை தமிழீழத்தின் நன்மையைக் கருத்திற் கொண்டு செயற்படஆவன செய்ய வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தொழிற்றுறை மேம்பாட்டு நிறுவன முகாமையாளர் எஸ். தியாகராசா அவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் கைத்தொழில் அபிவிருத்தி பற்றி கருத்துரை ஆற்றினார்.

பருத்தித்துறை நகரம் சுத்திகரிக்கப்படுகிறது

மாவீரர்வாரத்தையொட்டி பருத்தித்துறை நகரம் மற்றும் சுற்றுப்புற வீதிகள் தெருக்கள் துப்புரவு செய்யும் பணியில் பருத்தித்துறை நகராட்சி மன்ற தொழிலாளிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

வீதிகள் தெருக்களில் காணப்படுகின்ற குப்பை கூழங்களை வண்டி, டிராக்டர் மூலம் ஏற்றி அப்புறப்படுத்தி வருகின்றனர். நகராட்சி மன்றத்தின் எல்லைக்குட்பட்ட வீடுகளிலும் உள்ள குப்பை கூழங்களையும் துப்புரவு செய்து வருகின்றனர்.

பருத்தித்துறை நகராட்சி மன்ற செயலாளர் திரு கே. சண்முகநாதன் எடுத்த நடவடிக்கைகளையடுத்து வீதிகள் துப்புரவு பணிகள் துரிதமடைகின்றன. (யோ)

4-ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
22
-
11
-
1970

வீரச்சாவு
22
-
11
-
1990

மாங்குளம் இராணுவ முகாம் தகர்ப்பின்போது வீரச்சாவடைந்த

2ம் லெப்டினன்ட் கிரிஜா
(சுந்தரம் இரத்தினவதி)

என்றும் உன் நினைவுடன் வாழும்

கேணியடி,
இமையாணன்;

- குடும்பத்தினர்.

(10152)

மாணவனுக்கு புலமைப்பரிசில்

(வடமராட்சி)

ஹாட்லிக்கல்லூரி மாணவன் ஒருவருக்கு க. பொ. த. சாதாரணப் பரீட்சையில் அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்றமைக்காக மக்கள் வங்கி புலமைப் பரிசில்களை வழங்கவுள்ளது.

1993ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற இப் பரீட்சையில் கூடிய பெறுபேறுகளைப் பெற்ற வெஸ்லி தேவசுதர் தேவராசா என்ற மாணவனுக்கு மக்கள் வங்கி பரிசில்களை வழங்கவுள்ளது.

இம் மாணவன் ஆங்கில இலக்கியம் உட்பட எட்டு பாடங்களிலும் விசேடசித்தி [டி] பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. [யோ]

கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வலயம் இரண்டு பாடசாலைகளுக்கான க. பொ. த. (உ/த) இரசாயன பாடக் கருத்தரங்கு இன்று செவ்வாய் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில், இரசாயனம் கற்பிக்கும் சகல ஆசிரியர்களும் கலந்து கொள்ளுமாறு வலயம் இரண்டின் விஞ்ஞான உதவிக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

வடக்கின் சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினர் இடம்பெயர்வு

ஆய்வுப்பட்டறையில் உரை

(யாழ்ப்பாணம்)

அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை ஆராயும் போது பாதிக்கப்பட்ட தமிழ்ச்சமுதாயத்தின் பொருளாதார - உயிர் வாழ்வு முயற்சிகள் பற்றி கவனத்தில் எடுக்க வேண்டும்.

வாழ்விடமின்மை, வறுமை, தொழில் இன்மை பொருளாதாரநெருக்கடிகள் ஆகியசுமைகள் இன்றைய சூழ்நிலையில் தமிழ்ச் சமுதாயத்தின் மீதுள்ளதை உணர்ந்து இதற்கான செயற்திட்டங்களை வகுக்க வேண்டியதும் முக்கியமாகும்.

உடல், உள சமூகரீதியான பாதிப்புக்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களும் அவசியமாகின்றது. இதனால் இவ் அபிவிருத்தித் திட்டங்களை இனம் காணும்போது அனர்த்தங்களினால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் இவ் ஆய்வரங்கில் ஆராய வேண்டியது மிகமிக முக்கியமாகின்றது.

இந்த வகையில பாதிப்புக்களை நோக்கும் போது நேரடியான பாதிப்பு, மறைமுகமான பாதிப்பு என்று இரு வகைகளில் ஆராயலாம். இவ்வாறு யாழ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அனர்த்தங்களுக்கான அபிவிருத்தித் திட்டங்களை இனங்காணல் என்ற தலைப்பிலான ஆய்வுப் பட்டறையில் உரையாற்றிய தமிழர் புனர்வாழ்வு கழக பொறுப்பாளர் ஆ. ரவி தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நேரடியான பாதிப்பில் இடம்பெயர்ந்த நிலைகளையும் உழைப்பாளரை இழந்த பெண்களையும், வலுவிழந்தவர்களையும், இடம்பெயர்ந்ததினால் ஏற்பட்ட நேரடியான தொழில் இழப்புகளையும், ஆதரவற்ற சிறுவர்கள், குழந்தைகள் ஆகியவர்கள் பற்றி ஆராயலாம்,

மறைமுகமான பாதிப்பில் கல்வி, உள சம்பந்தமான பாதிப்புக்களையும் செய்தொழில் இழப்பு, தொழில் சார் பாதிப்புக்களையும் விரிவாக ஆராய வேண்டியுள்ளது.

மேலும் இப்பாதிப்புகளின் அடிப்படையில் அபிவிருத்தித் திட்டங்களை இனம் காணும் போது அனர்த்தங்களினால் ஏற்பட்ட தனிநபர் பாதிப்புகள், சமுதாய இழப்புகள் என்ற அடிப்படையிலும் ஆராய்வது அவசியமாகின்றது.

அத்துடன் இப்பாதிப்புகளுக்கு உள்ளான மக்கள் பல்வேறு வகையில் காணப்படுகின்றனர்.

வாழ்விடங்களையும், பொருளாதார பிரதேசங்களையும் இழந்து வெளியேறியவர்கள்.

வாழ்விடங்களை மட்டும் இழந்தவர்கள்.

தமது சொந்த இடத்தில் வாழ்ந்து கொண்டு பொருளாதாரப் பிரதேசத்தை இழந்த மக்கள்.

வன்செயலால் உழைக்கும் நபரை இழந்தவர்/ உழைக்கும் சக்தியை இழந்தவர்.

சிறிலங்கா அரசின் பொருளாதாரக் கொள்கையால் தமது பொருளாதார நடவடிக்கையைத் தொடர முடியாத மக்கள்.

இடம்பெயர்ந்த மக்களைப் பொறுத்தவரையில் இன்று வடக்கு கிழக்குப் பகுதிகளில் சகல மாவட்டங்களிலும் சுமார் 02 லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் சுமார் 04 இலட்சம் மக்கள் முகாம்களுக்கு வெளியேயும் 02 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து வெளிநாடுகளிலும் வாழ்கிறார்கள்.

இன்றைய சூழ்நிலையில் எமது வட பிரதேசத்தில் மட்டும் 300 ற்கு மேற்பட்ட நலன்புரி நிலையங்களுண்டு.

இன்று வட மாகாணத்தில் மட்டும் 05 மாவட்டங்களிலும் ஒரு லட்சத்து 36 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த 05 இலட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து வாழும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இது எமது வட பிரதேசத்திலுள்ள சனத்தொகையில் மூன்றிலொரு பகுதிக்கு மேற்பட்ட தொகையாகும்.

யாழ்ப்பாணத்தில் 78 834 குடும்பங்களின் 2, 64. 335 பேரும் வவுனியாவில் 14,919 குடும்பங்களின் 48,155பேரும் மன்னாரில் 21,475 குடும்பங்களின் 1, 04. 375 பேரும் முல்லைத்தீவில் 11,185 குடும்பங்களின் 55 925 பேரும் கிளிநொச்சியில் 8810 குடும்பங்களின் 44.050 பேரும் இடம் பெயர்ந்துள்ளனர்.

அபிவிருத்தி நடவடிக்கைகளைத் திட்டமிடும் போது இன்று உலக அரங்கில் மாறி வரும் பொருளாதார கட்டமைப்புகளையும் கவனத்தில் எடுக்க வேண்டும்.

இந்தவகையில் இன்று உலக அரங்கில் கட்டுப்பாட்டுப் பொருளாதாரம், சந்தைப் பொருளாதாரம், முகாமைப் பொருளாதாரக் கட்டமைப்புகள் பரவலாக ஏற்கப்பட்டு வலுப்பட்டு வருவதையும் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றார்.

திருட்டு முயற்சி தோல்வி

உடுவில் மகளிர் கல்லூரி அருகில் நேற்று முன்தினம் காலை யுவதி ஒருவரிடம் சங்கிலியை அறுக்க முயன்ற இளைஞர் ஒருவர் அவ்விடத்தில் நின்றவர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டார்.

காணாமற் போன 2மீனவர்; உறுதியான தகவல் ஏதுமில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த யூலை மாதம் 8-ம் திகதி அராலிக் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை சிறிலங்கா கடற்படையினால் கைதாகிய தீவகம்-தம்பாட்டியைச் சேர்ந்த நாகமணி தியாகராசா (வயது-55) தியாகராசா தியகுமார் (வயது-22) ஆகிய இருவரின் நிலைபற்றி இதுவரை உர்ஜிதமான தகவல்கள் எதுவும் தமக்கு கிடைக்கவில்லை என இவர்களின் குடும்பத்தினர் தெரிவிக்கின்றனர். இருவரும் படையினரால் கொல்லப்பட்டு விட்டதாக அண்மையில் வெளியான வதந்தியும் வெறும் 'கட்டுக் கதையே' எனவும், இது சம்பந்தமான கடிதம் ஒன்று தமக்கு கிடைத்ததாகவும் அக்கடிதமும் உறையிலிடப்படாமலும் முகவரி ஏதும் எழுதப்படாமலும் இருந்ததனால் நம்பகரமானதாக இல்லையென்றும் காணாமற் போன இருவரைப் பற்றி தகவல் அறிந்து தருமாறு செஞ்சிலுவைச் சங்கத்திடம் விடுத்த கோரிக்கைக்கும் இதுவரை பதில் ஏதும் இல்லையென்றும் பிரஸ்தாப குடும்பத்தினர் கூறினர்.

இதே வேளை படையினரின் தாக்குதலினால் காயமடைந்த இவ்விருவரையும் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு கொண்டு வந்து சிகிச்சை அளித்த பின் படையினர் தம்முடனே மீண்டும் கொண்டு சென்று விட்டதாகவும் அதன் பின்னர் இருவரையும் பற்றி அறிய முடியவில்லை என்றும் மேற்படி வைத்திய சாலையில் பணியாற்றும் இவர்களின் உறவினர் ஒருவர் மூலம் கொழும்பு வழியாக அறிய முடிந்ததாகவும், இக்குடும்பத்தினர் மேலும் கூறியுள்ளனர். நவாலி மயூரான் குடியிருப்பில் இவர்கள் வசிக்கின்றனர். (22)

புதிய அரசின் செலவின திட்டம் உதவிவழங்கும் நாடுகள் விசனம்

(கொழும்பு)

உலகவங்கி, ஆசிய அபிவிருத்திவங்கி சர்வதேச நாணய நிதிய அதிகாரிகள் சிறிலங்காவின் புதிய அரசுடன் பேச்சு நடத்த டிசம்பரில் கொழும்பு வரவுள்ளனர்; இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அடுத்த வருட ஏப்ரலில் பாரிஸில் நடைபெறவுள்ளது. இதற்குமுன்னோடியாக இவ்வதிகாரிகள் கொழும்பு வருகின்றனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்ற பெருமளவு செலவினங்கள் ஏற்படுவதாக உதவிவழங்கும் நாடுகள் பல விசனம் தெரிவித்துள்ளன வரவு செலவு திட்டத்தில் துண்டு விழும் தொகையை குறைப்பதற்காக சேமநலன்கள் மீதான செலவினங்களை குறைக்குமாறு உதவிவழங்கும் நாடுகள் நிர்ப்பந்திக்கலாம் எனக்கூறப்படுகின்றது.

அரசவங்கிகள் வழங்கிய பெருமளவு பணம் மீளப் பெறப்படாதிருப்பதும் விவசாயிகளுக்கு கடன் வழங்கல் அதிகரிப்பதும் குறித்து உதவி வழங்கும் நாடுகள் அதிருப்தி தெரிவித்துள்ளன.

ஒலிம்பிக் விளையாட்டில் 'ரக்பி' க்கு அங்கீகாரம்

(கொழும்பு)

ரக்பி ஒலிம்பிக் விளையாட்டுக்களில் ஒன்றாக அங்கீகரிக்கப்படவுள்ளது. அடுத்த வாரம் நடைபெறவுள்ள சம்பிரதாய பூர்வமான வைபவம் ஒன்றில் ரக்பி விளையாட்டுக்கு இந்த அங்கீகாரம் வழங்கப்படுமென சர்வதேச ஒலிம்பிக் சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. 1998ம் ஆண்டு மலேசியாவில் நடைபெறவுள்ள பொதுநல அமைப்பு நாடுகளின் விளையாட்டுப் போட்டிகளில் ரக்பி, ஹொக்கி கிரிக்கட் போன்ற விளையாட்டுகளும் சேர்த்துக் கொள்ளப்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

பொலிசார் இருவரை லஞ்ச அதிகாரிகள் தேடல்

(கொழும்பு)

மருதானை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரும், கான்ஸ்டபிள் ஒருவரும் லஞ்ச ஒழிப்புத் திணைக்களத்தால் தேடப்பட்டுகின்றனர். இவ் இருவரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜென்சி நடத்தும் ஒருவரிடமிருந்து அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டு அதை மீள ஒப்படைப்பதற்கு 2000 ரூபாவைத் தரும்படி கோரியுள்ளனர்.

இப் பணத்தை உணவு விடுதி ஒன்றின் உரிமையாளர் ஒருவரிடம் ஒப்படைத்து அவரிடமிருந்து அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளும்படி இவர் பணிக்கப்பட்டிருந்தார்.

சம்பந்தப்பட்ட உணவு விடுதி உரிமையாளரிடம் இந்நபர் பணத்தை ஒப்படைத்த போது லஞ்ச ஒழிப்பு திணைக்களத்தினரால் அவர் கைது செய்யப்பட்டார்இதைத்தொடர்ந்து சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் தலைமறைவாகி இருப்பதாகக் கூறப்படுகிறது.

கேகாலை எம்.பியின் மகன் மீது தாக்குதல்

எட்டியாந்தோட்டை பிரதேச சபை தலைவர் ரொஜித் பெரேரா பயணம் செய்த கார் இடைமறிக்கப்பட்டு தாக்கப்பட்டது இதனால் கார் பலத்த சேதமடைந்தது தலையில் துப்பாக்கிச் சூடுபட்டு ரொஜித்பெரேரா கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரொஜித்பெரேரா கேகாலை எம்.பி வின்சன்ற் பெரேராவின் மகனாவார் இதே சமயம் அத்தனகல பகுதியில் இளைஞர் ஒருவர் குத்திக் கொல்லப்பட்டுள்ளார்.

அமைச்சரின் செயலர் வீடு கும்பலால் தாக்கப்பட்டது

முன்னாள் அமைச்சர் விஜயபால மெண்டிசின் செயலாளராக கடமையாற்றிய ஆர்யபத்ம சில்வா என்பவரது நீர்கொழும்பில் உள்ள வீடு பொதுசன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களால் தாக்கப்பட்டுள்ளது நள்ளிரவு இரண்டு மணியளவில் நடத்தப்பட்ட இத் தாக்குதலால் இரண்டு லட்சம் ரூபா வரையில் வீட்டுக்கு சேதம் ஏற்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

முதலாவது பிறந்ததின வாழ்த்து

22-11-1994

செல்வி கார்த்திகா

அல்வாய் மாதாங் கோவிலடியைச் சேர்ந்த யோகேஸ்வரன் இரத்தினகுமாரி தம்பதியினரின் செல்வப் புதல்வி கார்த்திகா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார் இவரை அப்பு அப்பா, அம்மா, அப்புப்பா, அப்பம்மா, அம்மம்மா, ஜேர்மனியில் இருக்கும் பெரியமாமா, ஆசைமாமா, சின்னமாமா, அப்புப்பாட்டி, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், கொழும்பு அத்தை குடும்பத்தினர், மாமாமார், அத்தைமார், அம்மம்மாமார், அம்மப்பாமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், பாட்டன்மார், பாட்டிமார் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அன்னை அருள்பெற்று பல்கலையும் கற்று நீடூழி காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

- குடும்பத்தினர்

(10130)

கடற்புலிகளின் தற்போதைய நிலை தொடர்ந்தால் அரசபடைகள் வேறு மார்க்கத்தை தேடவேண்டும்

சாகரவர்த்தனா கப்பலின் கப்டன் கொமாண்டர் பொயாகொட

சாகரவர்த்தனா என்ற பெயருடைய ஆழ்கடல் ரோந்துக் கப்பலின் பிரதம கட்டளை அதிகாரியான கப்டன் பொயாகொட அவர்கள் விடுதலைப் புலிகள் பத்திரிகைக்கு அளித்த நேர்காணலை இங்கே தருகிறோம். 18-10-1994 ஆம் திகதி இந்த நேர்காணல் நடந்தது. நேர்காணலின் போது கப்டன் பொயாகொட அவர்கள் மிகவும் உற்சாகமாகக் காணப்பட்டார்; வெளிப்படையாகத் தனது கருத்துக்களைக் கூறினார். சுமார் ஒரு மணிநேரம் நடந்த இந்த நீண்ட நேர்காணலின் முழு விபரத்தையும் கீழே தந்துள்ளோம்.

கப்டன் பொயாகொட 14-12-1953 இல் கண்டியில் பிறந்தார், 1974 இல் சிறிலங்கா கடற்படையில் இணைந்து கொண்டார்; 'ஒஃப்ஃபீசர் கடெற்' (**Officer Cadet**) என்ற பதவி நிலையில் உடனேயே அமர்த்தப்பட்டார். அடிப்படைக் கடற்பயிற்சிகளை திருக்கோணமலை கடற்தளத்தில் பெற்றுக் கொண்ட பொயாகொட, மேலதிக விசேட பயிற்சிகளை இந்தியாவிலுள்ள 'கொச்சின் கடற்படைத் தளத்தில்' பெற்றுக் கொண்டார்.

★ 'சாகரவர்த்தனா' மீதான தாக்குதலைத் தொடர்ந்து எவ்வாறுநீங்கள் கைது செய்யப்பட்டீர்கள்?

தற்கொலைத் தாக்குதலைத் தொடர்ந்து 'சாகரவர்த்தனா' மூழ்கத் தொடங்கியது. கப்பலைக் கைவிட்டு நீரில் குதிக்கவேண்டிய நிலை எழுந்தது. 'ஜக்கெற்றுகளை' அணிந்து கொண்டு நீரில் குதித்து நீந்தினோம். சிறிது நேரத்தில் கடற்புலிப் படகொன்று என்னருகே வந்து என்னைப் படகிற்குள் ஏற்றியது. நான் தனியாகத்தான் பிடிக்கப்பட்டேன் அதன் பின் புலிகளின் முகாம் ஒன்றிற்குக் கூட்டிச் செல்லப்பட்டேன் அடுத்தநாள் காலையில் மேலும் ஒருவர் சிறைப் பிடிக்கப்பட்டதாக புலிகள் சொன்னார்கள். அதன் பின் அவ்வாறு பிடிக்கப்பட்டது எனது சக அதிகாரியான கயமே விசித்த என்று கண்டு கொண்டேன். அதன் பின்னர் நாங்கள் இருவரும் கிளாலியூடாக யாழ்ப்பாணம் கூட்டி வரப்பட்டு. இப்போது நாங்கள் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு - இடம் எதுவென்று தெரியவில்லை-கொண்டுவரப்பட்டோம்.

★ கைதுசெய்யப்பட்ட அந்தக் கணப்பொழுதில் நீங்கள் என்ன நினைத்தீர்கள்?

வெளிப்படையாகச் சொல்வதானால் என்னை என்ன செய்யப் போகின்றார்களோ என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அடிக்கப் போகின்றார்களா? அல்லது கொல்லப்போகின்றார்களா என எண்ணிக் கொணடிருந்தேன். அப்போது எனது மனைவியைப் பற்றியும் எனது குடும்பத்தைப்பற்றியும் நினைத்தேன். அப்படியான வேளையில் குடும்பத்தைப்பற்றி நினைப்பது இயற்கைதானே? நாங்கள் அதற்காகத்தானே வாழ்கின்றோம். ஆயினும் அவர்கள் (கடற்புலிகள்) என்னைக் கொல்லும் 'மூட்' இல் இருக்கவில்லை என்பதையும் உணர்ந்துகொண்டேன்.

★ இப்போது நீங்கள் ஒரு போர்க் கைதியாக உள்ளீர்கள். இங்கே எவ்வாறு நடத்தப்படுகிறீர்கள்?

என்னைப் புலிகள் நடாத்தும் முறைகண்டு மிகவும் சந்தோசப்படுகிறேன். ஒரு போர்க் கைதியைப்போலவோ...... அல்லது ஒரு கைதியைப்போலவோ நான் நடத்தப்படவில்லை; அதற்கும் மேலாக நட்புரிமையுடன் நடாத்தப்படுகின்றேன். இப்படியான ஒரு பராமரிப்பு முறைபற்றி நான் கொழும்பில் இருந்தபோது எதிர்பார்த்திருக்கவேயில்லை; கொழும்பில் மக்கள் கதைத்துக் கொள்வதற்கு முற்றிலும் மாறான ஒரு பராமரிப்பை (Treatment) நான் கண்டேன். குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய ஒரு விடயமென்று இதை நான் கூறுவேன்.

★ 200 பயணிகளுக்கு மேல் பலியாகிய கிளாலிக் கடல் நீரேரிப் படுகொலைகளைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். படகுப் பயணிகள் மீது சிறிலங்கா கடற்படை நடாத்திய இந்த வெறியாட்டத்திற்கு, ஏதாவது நியாயப்பாடுகள் இருக்கின்றன எனக் கருதுகின்றீர்களா?

தனிப்பட்ட ரீதியில் அத்தகைய படுகொலைகளை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். அப்படிச் செய்வதன் மூலம் தாங்கள் மேலும்மேலும் எதிரிகளையே உருவாக்குகின்றோம் அத்துடன் போர் முறைக்கே அது பிழையானது. ஒரு தாக்குதலைச் செய்யும் பொழுது அல்லது ஒரு இராணுவ நடவடிக்கை நேரத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இடையில் (Cross firing) அகப்பட்டு மக்கள் உயிரிழப்பது வேறு விடயம். அப்படியான தற்செயல் சாவுகளையும் தவிர்க்க வேண்டும்.

★ உங்களுடைய இருபது வருட கடற்படைச் சேவையில், புலிகளுக்கு எதிராக நேரடியாகப் பங்குகொண்ட இராணுவ நடவடிக்கைகள் பற்றிச்சொல்லமுடியுமா?

அப்படி எந்தவிதமான இராணுவ நடவடிக்கைகளிலும் நான் சம்பந்தப்படவில்லை. அப்படி ஒரு இராணுவ நடவடிக்கையில் பங்குபெறும் வாய்ப்பு (Opportunity) எனக்குக் கிடைக்கவில்லை ஆனால் ஒப்பறேசன் லிபறேசனை' குறிப்பிடலாம். அப்போது நான் கிழக்குப் பிராந்தியக் கடலில் சேவையில் இருந்தேன். அதில் நான் பங்குகொண்டிருந்தேன். அதுவும் நேரடியான போர் நடவடிக்கையில் அல்ல; கடல் ரோந்திலேயே ஈடுபட்டிருந்தேன்; கடற்படையினராகிய நாங்கள் உதவிப்பணிகளில்தான் (Supporting role) ஈடுபடுகின்றோம் அதுதான் உண்மை அத்துடன், பெரும்பாலும் நான் நிர்வாகப் பணிகளிலேயே ஈடுபட்டு வந்தேன் எந்த வழியிலும் நான் போர் வெறிகொண்ட ஆளல்ல.

★ ''சாகரவர்த்தனா'வின் அன்றாடக் கடமைகள் என்ன? விசேட கடமைகள் என்ன?

எங்களுக்குத் தரப்பட்டது கடல் ரோந்துப் பணிதான். அத்துடன் கடல் கண்காணிப்பும் மீனவர்களுக்குப் பாதுகாப்புவழங்குவதும்தான் இவைதான் நாங்கள் செய்யும் பணிகள்.

★ தமிழ்நாட்டு மீனவர் படகுகள் மீதான தாக்குதல் சம்பவங்களுக்கும் 'சாகரவர்த்தனா' வுக்கும் சம்பந்த முள்ளதாக, சில செய்திகள் கூறுகின்றனவே? அது உண்மையா? அப்படியாயின் அத்தகைய தாக்குதல்களில் பங்குகொண்ட போர்ப் படகுகள் பற்றிக் கூற முடியுமா?

எம்முடைய 'கொமாண்ட்' காலத்தில் அப்படி ஒன்றும் நடைபெறவில்லை இரு நாடுகளும் கைச்சாத்திட்ட ஒரு உடன்படிக்கை இப்போதுஉள்ளது அதன்படி தமிழ் நாட்டு மீனவர்களை நாம் தாக்க முடியாது. எங்களுடைய கடல் எல்லைக்குள் அவர்கள் மீன் பிடிக்கும் போது அவர்களை சுமுகமான அணுகுமுறைகள் மூலம் அப்புறப்படுத்த வேண்டியிருக்கும்; அப்படியான நடவடிக்கைகளை நான் செய்திருக்கின்றேன்.

★ இல்லையே! தமிழ் நாட்டு மீனவர்கள் கொல்லப்பட்டதுபற்றி அவர்களே எதிர்ப்புப் போராட்டங்களை நடாத்தியுள்ளனரே?

ஆம் அவர்களின் படகுகளை அப்புறப்படுத்தும் போது அப்படியான சில சம்பவங்கள் நடந்துள்ளன குறிப்பிட்ட ஒரு கப்பல் என்றில்லாமல் கடற்படையின் ஏனைய கப்பல்களும் இதைச் செய்துள்ளன. அவர்கள் (தமிழ்நாட்டு மீனவர்கள்) ஆயிரக்கணக்கான படகுகளில் எங்களது கடற்பரப்பிற்குள் வருவார்கள். ஆகவே அதைத் தடுக்கும் நோக்கில் அதை (தாக்குதல்கள்) செய்ய வேண்டியிருக்கின்றது; சிலவேளைகளில் சாவுகளையும் ஏற்படுத்தியுள்ளன. இத்தகைய சில சம்பவங்களுக்குப் பின் இப்போது ஒரு உடன்பாடு வந்துள்ளது. உண்மையில், பெருந்தொகைப் படகுகளுடன் எமது கடல் எல்லைக்குள் புகும் தமிழ்நாட்டு மீனவர்களைத் தடுப்பதும், அவர்களை எமது கடலெல்லைக்கு அப்பால் விரட்டி விடுவதும் கடற்படைக்கு ஒரு கடினமான பணியாகவே இருக்கின்றது.

★ கடலில் இருந்தபடி, கரையோரக் கிராமங்கள் மீது உங்களது போர்க்கப்பல்கள் எறிகணைத்தாக்குதல்களை நடாத்துகின்றனவே! இது ஏன்? இதற்கு ஏதாவது இராணுவ நோக்கம் உள்ளதா?

இது சரியான தகவல் என்று எனக்குத் தெரியவில்லை. கடற்படைக் கப்பல்கள் ஏன் அவ்வாறு சுடவேண்டும்? அதாவது பொதுமக்களைச் சாகடிக்க வேண்டும் என்பதற்கு எந்த ஒரு காரணமுமில்லை அத்துடன் இத்தகைய உயிராபத்துக்களை ஏற்படுத்தக் கூடிய நீண்டதூர வீச்சுக்கொண்ட ஆயுதங்களும் எமது கப்பல்களில் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

★ 5 கி. மீற்றருக்கும்மேற்பட்ட தூரத்திற்கு எறிகணை வீசக்கூடிய சுடுகருவிகள் உங்களது கடற்படைக்கப்பல்களில் உண்டே? அத்துடன் கிரமமான முறையில் எறிகணைகளைவீசும் கடற்படைக் கப்பல்கள் கரையோரப் பகுதி மக்களைக் கொன்று வருகின்றனரே...?

அப்படி நடக்குமாக இருந்தால் அது வீம்புக்குச் சுட்டு விளையாடும் சில நபர்களது (Trigger happy Persons) வேலையாக இருக்கலாம்; ஏனென்றால் அவ்விதமான நடவடிக்கைகளுக்குப் பின்னால் எந்த ஒரு இராணுவ நோக்கமும் இருப்பதில்லை.

★ இராணுவ முகாம்களில் இருந்தும் கடல் நடுவிலிருந்தும் தமிழர் குடியிருப்புகள் மீது நடாத்தப்படும் எறிகணைத் தாக்குதல்களுக்கு புலிகளுக்கெதிரான நடவடிக்கை அல்லது தற்காப்பு என்று அரச தரப்பிலிருந்து காரணம் கற்பிக்கப்படுகின்றது. இதே காரணங்களைக் கூறிக்கொண்டு சிங்களவர்குடிமனைகள் மீது புலிகள் எறிகணைத் தாக்குதல்களை நடாத்தினால், அதைநீங்கள் ஏற்றுக்கொள்வீர்களா?

தரையில் ஒரு இராணுவ நடவடிக்கை நடந்து, தரைத் துருப்புக்களின் முன்னேறும் நடவடிக்கைக்கு குண்டுவீச்சு உதவி (Fire power) தேவைப்பட்டாலொழிய மற்றும்படி ஒரு கப்பல் கரை மீது எறிகணை வீச எந்தக் காரணமுமில்லை.

எல்லா நடவடிக்கைகளுக்கும் சமமான அளவில் மறுநடவடிக்கைகளும் இருக்கும் (All actions have equal reactions)

அரச படைகள் தமிழ் மக்கள் மீது தாக்குதல்களை நடாத்தினால், புலிகளும் அதேவழிமுறையில் பழிவாங்க முனைவார்கள். சிங்களக் குடியேற்றவாசிகள் மீது - எல்லைப்புறச் சிங்களவர்கள்மீது - தாக்குதல்களை நடாத்துவார்கள்.

★ புலிகளுக்கெதிரான இராணுவச் செயற்பாடுகளின் போது உங்களால் மறக்க முடியாத நினைவுகள் ஏதாவது இருந்தால், அதை எங்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?

அப்படியான ஒரு போர்க்களத்துடன் நான் சம்பந்தப்பட்டிருக்கவில்லை. அதனால் இப்படியான ஒரு நினைவு எனது மனதில் இல்லை. ஆயினும் அந்த இறுதிச் சம்பவம் எனது வாழ்க்கையில் என்றும் மறக்கப்பட முடியாதது. ஒரு தற்கொலைத்தாக்குதலை என் கண்ணாற் கண்டேன். எனது கப்பல் உடைந்து மூழ்கியதைக் கண்டேன்; எனது சகாக்கள் துன்பப்பட்டு இறந்ததைக் கண்டேன் சிலர் உயிருக்காகப் போராடியதையும் கண்டேன். என்னுடைய வாழ்க்கையில் என்றும் இது மறக்கமுடியாத சம்பவம்.

★ வடபுலக் கடலில் - மன்னார் வளைகுடா உட்பட - கடற்படைக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் நடைபெறும் கடற்போர் பற்றிய உங்களது மதிப்பீடு என்ன?

கடற்புலிகளைத் தடுத்து நிறுத்த நாங்கள் முயன்று கொண்டிருக்கின்றோம்; எங்களது நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்த அவர்கள் முயன்று கொண்டிருக்கின்றார்கள் இப்போது நடந்துகொண்டிருக்கின்ற கடற்சண்டை இதுதான். ஒன்றை மட்டும் உறுதியாகச்சொல்ல முடியும். கடற்புலிகளிடம் ஒரு தற்கொலைப் படை இருக்கிறது. அது காரணமாக அவர்கள் ஒரு நல்ல நிலையில் (Better position) இருக்கின்றார்கள். இதேநிலை தொடருமாக இருந்தால், அரசபடைகள் வேறு ஏதாவது ஒரு மார்க்கத்தைத் தேடிப் பிடிக்கவேண்டியிருக்கும் என்று நான் நினைக்கிறேன்; அதாவது படைத்தளபாடங்களை அதிநவீனமயப்படுத்த வேண்டிவரும். ஆனால் சிறிலங்காவைப்போல சிறிய நாடுகளுக்கு இது முடியாத காரியமாகும். கப்பல்கள் வாங்குவதிலும் வெடிப்பொருட்கள் வாங்குவதிலும் அரசு பெருந்தொகைப் பணத்தைச் செலவழிக்கின்றது. இப்போது நாங்கள் ஆட்களையும் ஆயுதங்களையும் இழந்து வருகின்றோம். நாட்டின் பொருளாதாரமும் நாளுக்கு நாள் படுகுழிக்குள் செல்கின்றது. என்னைப் பொறுத்தவரை புத்தி சாதுரியமான முடிவு என்னவென்றால், இந்தப் பிரச்சினைக்கு ஒரு அரசியற் தீர்வு கொண்டுவரப்பட வேண்டும் என்பதுதான்.

★ கடற்படைக்குப் பேரழிவுகளை ஏற்படுத்தி, படிப்படியாகக்கடற்படையின் அசைவியக்கத்தை (Mobility) கடற்புலிகள் தடுத்து நிறுத்தும்போது, வடபுலத்தில் இராணுவ முகாம்களை வைத்திருக்க முடியாதுபோகும் என்று இராணுவ விமர்சகர்கள் கூறுவது பற்றி...?

முழுமையாகப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறமாட்டேன்; சிறிய அளவில் பாதிப்பு ஏற்படலாம்.

★ போர்க்கப்பல்கள் மூழ்கடிக்கப்படும் போது அதன் கப்டன்கள் உயிரோடு மீள்வதை அவமானமாகக் கருதும் ஒரு கடற்போர் மரபு இருப்பதாகக் கூறுகின்றனரே? இதுதொடர்பாக நீங்கள் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

முன்னைய காலத்தில் ஒரு கப்பல் மூழ்கும்போது அதன் கப்டனும் அதனுடனேயே செல்வார்; ஆனால் தற்போதைய மரபு அப்படியல்ல: தோல்வியடைந்து போகின்ற ஒரு சமரில் நீ சண்டையிட முனையக்கூடாது(you don't try to fight, in a losing Battle), அதைத் தவிர்க்க வேண்டும்; அல்லது அதிலிருந்து பின்வாங்கி அடுத்த நாள் சண்டைக்குப் போக வேண்டும். முகங்கொடுத்து வெல்ல முடியாத ஒரு சூழ்நிலை எழுந்தவுடன், அதைத் தவிர்ப்பதற்காக இராணுவம் கூடப் பின்வாங்குகின்றது. பின்வாங்கி-தன்னை மீளவும் ஒருங்கமைத்துக் கொண்டு - அடுத்த சண்டைக்குத் தயாராகிறது; கப்பலுடனே சாவது என்ற முன்னைய கால மரபு இப்போது எந்த நாட்டிலும் நடைமுறையிலில்லை.

'சாகரவர்த்தனா' கப்பலுக்கு நான்தான் பொறுப்பு. அதில் எந்த சந்தேகமும் எனக்கில்லை. ஆனால் பேரழிவுக்கு அது உட்படுத்தப்பட்ட அந்த சூழலை உணர்ந்து கொள்ள வேண்டும்.

★ 'சாகரவர்த்தனா' வை இழந்ததற்காக, அதன் கப்டன் என்ற முறையில் உங்களை இராணுவ நீதிமன்றில் நிறுத்தி விசாரணை செய்யப்போவதாக, கொழும்புப் பத்திரிகைகள் கூறுகின்றனவே?

என்னை இராணுவ நீதிமன்றில் நிறுத்தக் கூடும்; அங்கே எனது குற்றமற்ற தன்மையை நிரூபிக்கும்படி பணிக்கப்படக்கூடும்: அல்லது கப்பல் மூழ்கக் காரணமான சூழ்நிலை பற்றிக் கேட்கக் கூடும் கப்பல் மூழ்கும்போது கடைசியாகக் கடலில் குதித்த ஆள் நான்தான். அத்துடன், எனக்கு அடுத்த அதிகாரியும் (Second in command) உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளார். நாங்கள் இருவரும்தான் கப்பலை விட்டு இறுதியாக வெளியேறிய ஆட்கள். என்னுடைய தகைமைகளுக்கு (Abilities) ஏற்ற வகையில் நான் எனது கடமைகளை ஆற்றியுள்ளேன். என் மீது ஏதாவது குற்றம் நிரூபிக்கப்படும்வரை நான் நிரபராதிதான்.

நன்றி:
'விடுதலைப்புலிகள்'

தமக்கும் அமைச்சு பதவி சந்திரசேகரன் கோரிக்கை

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியில் தமக்கும் அமைச்சர் பதவி தருமாறு மலையக மக்கள் முன்னணித் தலைவரும் தற்போது பிரதி அமைச்சர்களில் ஒருவராக இருக்கும் பி. சந்திரசேகரன் ஜனாதிபதி சந்திரிகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று ஜனாதிபதியை சந்தித்த சந்திரசேகரன் தொண்டமானுக்கு வழங்கப்பட்டதைப் போன்று தமக்கும் அமைச்சர் பதவி வழங்கப்படா விட்டால் அரசிலிருந்து விலகுமாறு தமது கட்சியினர் தம்மை நெருக்குகின்றனர் என்று கூறினார். இதற்கு ஜனாதிபதி சந்திரிகா சந்திரசேகரன் முன்னதாக தாம் அரசு அமைக்க நிபந்தனையின்றி ஆதரவு அளித்ததை மறக்கவில்லை என்றும் ஆறு மாதங்களில் அமைச்சரவையில் மாற்றம் செய்யும் போது சந்திரசேகரனின் கோரிக்கையை கருத்திற் தாம் கொள்வதாகவும் உறுதியளித்தார்.

ஒவ்வொரு தமிழ்ப் பாடசாலைக்கும் ஒரு சிங்கள மொழி ஆசிரியர் நியமனம்

அம்பாறை சு. க. அமைப்பாளர் தகவல்

(காரைதீவு)

ஒவ்வொரு தமிழ்மொழி மூலப் பாடசாலைக்கும் ஒவ்வொரு சிங்கள மொழி ஆசிரியரை நியமிக்க எமது கட்சி முதற்கட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது இவ்வாறு சுதந்திரக் கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளர் சட்டத்தரணி ஏ. எம் சம்சுதீன் கூறியுள்ளார்,

அவர் மேலும் கூறுகையில் 43 அம்பாறை மாவட்டத்தில் 43 பேருக்கு விரைவில் சிங்கள ஆசிரிய நியமனம் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படும். கல்முனை வலயத்தில் தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம் போதிப்பதற்காக 65பேர் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர்களில் 22 பேர் ஏற்கனவே நியமனம் செய்யப்பட்டு விட்டதாகவும் குறிப்பிட்டார்.

ஒஸியின் சகோதரருக்கு ஐ. தே. க. எம். பி பதவி?

மகாஜன பக்ஷய கட்சி கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா மகாஜன பக்ஷய தமது கட்சிப்பிரதிநிதி ஒருவர் பாராளுமன்றத்தில் இடம் பெறுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பீடம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென வலியுறுத்தியுள்ளது.

ஒஸி அபயகுணசேகரா காலமானதால் ஏற்பட்ட வெற்றிடம் தேர்தல் விதி முறைகளுக்கு ஏற்ப முன்னாள் இந்து கலாசார அமைச்சரும் இ. தொ. கா. பிரமுகருமான பீ. பீ. தேவராஜினால் நிரப்பப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தேசியப் பட்டியல் மூலமாவது ஒரு இடம் ஒதுக்கப்பட வேண்டும் எனவும்இவ்வாறுஒதுக்கப்படும் பட்சத்தில் கட்சியின் முக்கிய பிரமுகரும், ஒஸி அபயகுண சேகராவின் சகோதரருமான சுரேன் அபயகுணசேகரா பாராளுமன்ற உறுப்பினராக நியமனம் பெறலாம் எனவும் கூறப்படுகிறது.

அகதிகள் முகாமிலிருந்தும் இடம்பெயரும் அவலநிலை

நவாலி மயூரன் குடியிருப்பில் வீடுகள் பெரும்பாலானவை ஒழுக்கு நிறைந்தவையாக காணப்படுகின்றன பலத்த மழை பெய்யும் நேரங்களில் மக்கள் சமைப்பதற்கும் படுத்துறங்குவதற்கும் வேறிடங்களை நாட வேண்டியுள்ளது வீடுகள் அனைத்தும் கடந்த வருடம் வேயப்பட்டவை ஆயினும் கூடுதலான கறையான்கள் காணப்படுவதால் கிடுகுகள் விரைவிலேயே பழுதடைந்தமையே இந் நிலைமைக்கு காரணம் என கூறப்படுகிறது.

மழை தொடர்ச்சியாக பெய்யும் பட்சத்தில் சில குடும்பங்கள் அருகில் உள்ள கண்ணகை அம்மன் கோவிலில் சென்று தங்கி இருந்து விட்டு திரும்புவதாகவும் குடியிருப்பு நிர்வாகத்தினர் தரப்பில் கூறப்பட்டது. தீவகத்தைச் சேர்ந்த 58 குடும்பங்களின் 271 பேர் இக் குடியிருப்பில் தங்கி உள்ளனர். [22]

சிந்தனைக்கு

குரு முட்டையை உடைக்கலாம் என்றால், அவர் சீடன் கோழிகளையே கொல்லலாம்.

-திபெத நாட்டு பழமொழி

ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22- 11 -1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05

உறுதியான முடிவு தேவை

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கத்திற்கு இனப்பிரச்சினை விவகாரத்தில் தேர்தலுக்கு முன்பிருந்த அக்கறையும் இல்லை. அவசரமும் இல்லை, அவ்வாறு இருக்குமானால் விடுதலைப்புலிகள் இயக்கம் போர் இடைநிறுத்தம் அறிவித்து ஒரு வார காலம் முடிவடையும் வரையில் இது குறித்த அடுத்த கட்ட நடவடிக்கைபற்றி தீவிரமாகச்சிந்தித்து விரைவாக செயற்படாமல் இருந்திருக்கமாட்டாது; அத்தோடு இப்போர் இடைநிறுத்தகாலத்தில் இராணுவம் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதித்தும் இருக்கமாட்டாது.

ஆனால் புலிகள் அறிவித்த போர் இடைநிறுத்தகும் முடிவடைந்த பின்னர் மேலும் இருவார காலத்திற்குப் போர் நிறுத்தம் ஒன்றைச் செய்வது குறித்து அபிப்பிராயம் கோரி சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார், இக்கடிதத்திற்கு தலைவர் பிரபாகரன் அன்றே உடனடியாகப் பதில் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

யுத்தநிறுத்தம் என்பது பேச்சளவில் கடைப்பிடிக்கும் ஒரு அறிவிப்பு மட்டுமல்ல. அது மிகவும் கட்டுப்பாட்டுடன் கடைப்பிடிக்கப்பட வேண்டிய தொன்றாகும். இல்லாது போனால் அதில் அர்த்தம் எதுவும் இல்லாது போய்விடும் இந்தத்தலைவர் பிரபாகரன்தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளார். இவ்விடயத்தில் தலைவர் பிரபாகரனின் நிலைப்பாடு குறித்துப் பேசிய அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் போர் நிறுத்தம் என்று அறிவிப்புச் செய்வது இதில் முக்கியமல்ல. போர்நிறுத்தத்தை இராணுவம் கடைப்பிடிக்குமா? கட்டுப்பாடாக நடந்து கொள்ளுமா? சும்மா 'போர் நிறுத்தத்தை செய்துவிட்டு உலகிற்கு நாங்கள் போர் நிறுத்தம் செய்கின்றோம் எனக் கூறுவதில் பயனில்லை' எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

விடுதலைப்புலிகள் எழுப்பியுள்ள இக்கேள்வியானது முற்றிலும் நியாயமானதே. ஏனெனில் விடுதலைப்புலிகள் நல்லெண்ண சமிக்ஞையாக ஒருவார கால போர் இடைநிறுத்தத்தை அறிவித்த போது அரசாங்கமோ, இராணுவமோ அதில் அக்கறை காட்டவில்லை.மாறாக உதாசீனமும் செய்தனர். இதன் காரணமாக பொது மக்களும், விடுதலைப் புலிப் போராளிகளும் இழப்புகளைச் சந்திக்க வேண்டியும் வந்தது;

இந்த நிலையில் தான் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தையின் யுத்த நிறுத்தக் கோரிக்கைக்குத் தலைவர் பிரபாகரன் எழுதிய பதிலில் நெடுங்கேணிப் பகுதியில் கடந்த 16ஆம் திகதி கொல்லப்பட்ட விடுதலைப்புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் அமுதன் (மல்லி) யின் கொலை குறித்தும் அவர் தலை வெட்டிச் செல்லப்பட்டது குறித்தும் விசாரணை செய்து பதில் அனுப்புமாறு கோரியுள்ளார். இக்கோரிக்கையானது போர் நிறுத்தத்திற்கு தலைவர் பிரபாகரன் விதித்த நிபந்தனை என்று கொள்ள முடியாது. போர்நிறுத்தம் மீறப்படுதல் எத்தகைய பாதிப்புக்களை ஏற்படுத்துமென்பதை உணர்த்துவதற்கான நடவடிக்கையே ஆகும்.

ஆனால் தலைவர் பிரபாகரனின் இக்கோரிக்கையை எவரும் புறக்கணிக்கவோ அன்றித் தப்பானதோ என்று கூறிவிட முடியாது. சமாதானத்திலும் போர்நிறுத்தத்திலும் அக்கறையற்றவர்களே இதற்கு காரணம் கூற முற்படலாம். இராணுவம் போர் ஓய்வைக் கடைப்பிடிப்பதாக அறிவிக்கவில்லையே என்றும் கேள்வி கேட்க முற்படலாம்;

இவ்வாறு காரணம் கூற முற்படுபவர்கள் எவரும் அடுத்த கட்ட யுத்தநிறுத்தம் ஒன்று ஏற்படுமானால் முன்னர் போன்றதொருநிலையையே மேற்கொள்ளக் கூடியவர்கள்; யுத்த நிறுத்த மீறல்களுக்குக் காரணம் தேடுவதே அவர்களின் குறிக்கோளாக இருக்கும், ஏனெனில் யுத்தநிறுத்தம் பற்றி அவர்கள் மனப்பூர்வமான விருப்பமோ சமாதானத் தீர்வில் அக்கறை கொண்டவர்களாகவோ இருக்கமாட்டார்கள். இந்நிலையானது தொடர்ந்தும் விடுதலைப்புலிகளையும் தமிழ் மக்களையும் பாதிப்பதாகவே இருக்கும்.

இந்தவகையில் சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கத்தின் நிலைப்பாடும் முக்கியமானதே, ஏற்கனவே தடுமாறத்தொடங்கி விட்ட சந்திரிகா அரசு இவ்விடயத்தில் எவ்வளவு அக்கறையும், ஆர்வமும் காட்டுகின்றதோ அதைப் பொறுத்தே யுத்தநிறுத்தத்திலும், சமாதானத் தீர்விலும் அதன் அக்கறை வெளிப் படுவதாக இருக்கும். இந்தவிடயத்தில் சந்திரிகா அரசாங்கம் ஆர்வமின்றியோ அன்றி இராணுவத்தின் இந்நடவடிக்கைக்கு எதிராக விசாரணை செய்ய முடியாத நிலையோ இருப்பின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்த கோரிய யுத்தநிறுத்தத்திலும் அர்த்தம் இருக்கப் போவதில்லை. இராணுவத்தை தமது பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்துக் கொள்ள அரசாங்கத்தால் முடியாதுவிட்டால் அதனுடன் யுத்தநிறுத்தம் செய்வதில் பயனில்லை. அவ்வாறில்லாது யுத்தநிறுத்தம் ஒன்று செய்யப்பட்டால் இதனை மீறும் இராணுவம் யுத்த நிறுத்தம் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலானதே ஒழிய நமக்கில்லை என்று கூறினும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

கப்பலில் வரும் பொருட்களின் உதிரிப்பாகங்கள் திருட்டு

(வடமராட்சி)

சரக்குக் கப்பலில் பருத்தித்துறை துறைமுகத்திற்கு எடுத்து வரப்படுகின்ற ஒரு சில மோட்டார் சைக்கிள், ஜெனரேட்டர் என்பனவற்றின் முக்கிய உதிரிப் பாகங்கள் கப்பலிலேயே மாயமாக மறைந்து விடுகின்றன.

காங்கேசன்துறைக்கு வந்து சில தினங்கள் அங்கே தொடர்ந்து தரித்து நின்று விட்டு பின்னர் பருத்தித்துறைக்கு வருகின்ற கப்பலிலேயே உதிரிப்பாகங்கள் மாயமாக மறைந்து விடுகின்றன; கப்பலில் பணிபுரியும் ஊழியர்கள், படையினரே இப் பொருள்களைத் திருடி விடுவதாக தெரியவருகிறது.

பருத்தித்துறையில் தற்போது தரித்து நிற்கும் 'ஹரண்' கப்பலில் எடுத்து வரப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றின் பற்றரி, பெற்றோல், பிளக் மற்றும் சாவி வகைகள் என்பன திருடப்பட்ட நிலையில் வந்துள்ளது இதே போன்று மக்னட் இல்லாத நிலையில் ஜெனரேட்டர்களும் முன்னர் வந்த கப்பலில் வந்து சேர்ந்தமையும் குறிப்பிடத்தக்கது. [போ]

மழை வெள்ளத்தில்
12 அதிரடிப்படை முகாம்கள்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் பெய்த கடும் மழையினால் காட்டுப்பகுதிகளில் அமைந்துள்ள அதிரடிப்படையினரின் முகாம்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக ஐலண்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

வெள்ளம் காரணமாக சுமார் 12 அதிரடிப்படை முகாம்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இந்நிலையில் இம்முகாம்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல், நடத்தக் கூடிய வாய்ப்பை நிராகரிக்க முடியாது என படைவட்டாரங்கள் கருதுவதாகவும் ஐலண்ட் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

அம்பாறை ஆஸ்பத்திரியில்
வைத்தியர்கள் வேலைநிறுத்தம்

அம்பாறை மாவட்ட வைத்தியசாலையின் டாக்டர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதைத் தொடர்ந்து வைத்தியசாலைப் பணிகள் ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன இதனால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள 226 நோயாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் வெளி நோயாளர் பிரிவும் மூடப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையில் கடமையாற்றும் 23 டாக்டர்களும் இவர்களில் மூவரைத் தவிர ஏனையோர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பது குறிப்பிடத்தக்கது

இப்பகுதியின் அரசியல்வாதி ஒருவரின் தலையீடு வைத்தியசாலை நிர்வாகத்தில் ஏற்பட்டதைத் தொடர்ந்தே இவ் வேலை நிறுத்தம் மேற்கொண்டிருப்பதாக கூறப்படுகிறது

500 சிறைக்கைதிகளுக்கு
பொதுமன்னிப்பு

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றிருப்பதைத் தொடர்ந்து 500 சிறைக் கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு சிறைச்சாலைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

அபராதப்பணம் செலுத்தத் தவறியதால் சிறைத் தண்டனை அநுபவித்து வந்த கைதிகளுக்கு முதலில் மன்னிப்பு வழங்கப்படுவதாகவும், ஏனையவர்களுக்கு இருவார காலத்தில் மன்னிப்பு வழங்கப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் சிறைச்சாலைத் திணைக்களம் மேலும் கூறியுள்ளது

குற்றச்செயலுடன் தொடர்புடைய

வடபகுதி வாலிபர்
பொலிசாரால் கைது

பலவிதமான குற்றச்செயல்களுடன் தொடர்புடையவர் எனப் பொலிசாரால் கருதப்படும் வாமதேவன் பிரதீப் குமார் என்பவர் கடந்த செவ்வாயன்று புறக்கோட்டை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்,

பேபி மற்றும் அன்ட்ரு என்ற பெயர்களாலும் அழைக்கப்படும் இவரிடமிருந்து பிரவுணிங் ரகபிஸ்டல் ஒன்றும் சைனைட் குப்பி ஒன்றும் பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு முரளி என்பவரிடமிருந்து இப் பிஸ்டலையும் சைனைட் குப்பியையும் ரூபா 25,000 கொடுத்து வாங்கியதாக விசாரணைகளின் போது இவர் தெரிவித்துள்ளார். இவர் தமிழீழ விடுதலை இயக்கமான ரெலோவுடன் சிறிது காலம் செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது

கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திலும் கல்கிசை மாவட்ட நீதிமன்றத்திலும் தலா இரண்டு வழக்குகள் வீதம் மொத்தம் நான்கு வழக்குகள் இவர் மீது பொலிசாரால் தொடரப்பட்டுள்ளது. இது தவிர மினுவாங்கொடை பொலிசாரும் தெகிவளைப் பொலிசாரும் இவர் மீது வழக்குகள் தாக்கல் செய்யவுள்ளனர்,

கடந்த சில மாதங்களாக கொலை முயற்சி கப்பம் வாங்குதல், கொள்ளைகள் என்பவற்றில் இவர் ஈடுபட்டிருந்தாகக் கூறப்படுகிறது.

கின்னஸ் நூலில்
சந்திரிகா பெயர்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் பெயர் உலக சாதனைப் புத்தகமான கின்னஸின் அடுத்த பதிப்பில் இடம்பெறவுள்ளது:

பிரதமர் அல்லது ஜனாதிபதி ஒருவரின் பெற்றோர்கள் இருவருமே பிரதமர்களாக இருந்தார்கள் என்ற சாதனைக்காகவே இது இடம் பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் வாரத்தையொட்டி
வீரவணக்க கூட்டங்கள்

(யாழ்ப்பாண)

மாவீரர் வாரத்தையொட்டி இன்று நடைபெறும் வீரவணக்க கூட்டங்கள் விபரம்: இரவு 7-30 மணிக்கு யாழ் வட்டத்தில் வண்ணார் பண்ணை ஐயனார் கோவிலடியிலும், உடுவில் வட்டத்தில் மல்லாகம் ஞானப்பிரகாசர் சனசமூக நிலையத்திலும், கைதடி வட்டத்தில் கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும், பருத்தித்துறை வட்டத்தில் பொலிகண்டி பத்திரகாளி கோவில் முன்றலிலும் நடைபெறும்கூட்ட இறுதியில் கலை நிகழ்வுகளும் இடம் பெறும்;

இந்திய நிபுணர்களை
அழைப்பதில் அசட்டையாம்

அரசு மீது குற்றச்சாட்டு

காமினி திசாநாயக்கா கொலையுண்ட குண்டு வெடிப்பு சம்பவம் நிகழ்ந்து ஒரு மாதமாகி விட்ட போதும் இந்திய நிபுணர்களை வரவழைக்கும் வகையில் அரசாங்கம் ஆக்க பூர்வமான நடவடிக்கை எதையும் மேற்கொள்ளவில்லை இவ்வாறு காமினி திசாநாயக்கா குடும்பத்தவரால் நியமிக்கப்பட்டுள்ள சட்டத்தரணியான தயாபெரேரா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் லலித் அத்துலத்முதலி கொலை செய்யப்பட்ட போது அப்போதைய ஐ.தே.க அரசு நான்கு நாட்களில் ஸ்கொட்லண்ட் யார்ட் புலனாய்வு நிபுணர்களை வரவழைத்து இருந்தது

அத்துடன் ஜனாதிபதி தேர்தல் முடிவுக்குப் பின்னர் இவ் விடயத்தில் அக்கறை காட்டப்படுவதாக இல்லை எனவும் தெரிவித்தார்.

இராணுவ உபகரணங்களை தனியார் உற்பத்தி செய்வர்

இந்திய இராணுவம் விடுத்த கோரிக்கை

(புதுடில்லி)

இந்திய இராணுவத்தினர் தமக்கு கனரக இராணுவ உபகரணங்களை வடிவமைத்து உற்பத்தி செய்து தரும்படி உள்ளூர் தனியார் நிறுவனங்களிடம் அழைப்புவிடுத்துள்ளது பலதசாப்தங்களாக வெளிநாட்டு விநியோகத்தர்களிடமிருந்து இராணுவ உபகரணங்கள் பெறப்பட்டு வந்தன. இந் நிலைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நோக்குடன் இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது:

இராணுவ உயர் மட்டத்தினருக்கும் கைத்தொழில் தலைவர்களுக்கும் உள்ளூரில் இராணுவ உபகரண உற்பத்தி பற்றி கலந்துரையாடல் ஒன்றை நடத்தினர். உள்ளூரில் இராணுவ உற்பத்தி முயற்சி மேற்கொள்ளப்படுவதால் படையினருக்கான வருடாந்த இராணுவ உபகரண விநியோகம் தற்போதைய 30 சதவீதத்திலிருந்து 2000 ஆம் ஆண்டளவில் 70 சதவீதமாக அதிகரிக்கும் என கைத்தொழில் தலைவர்கள் கருத்துத் தெரிவித்தனர்,

புதுடில்லியின் இராணுவ தேவைகளில் 70 சதவீதத்தை முன்னர் சோவியத் யூனியன் வழங்கி வந்தது சோவியத்தின் பிளவைத் தொடர்ந்து இந்திய இராணுவத்திற்கான உதிரிப்பாக விநியோகத்தில் பிரச்சினை ஏற்பட்டுள்ளது இந்தியாவில் வருடாந்தம் 400 கோடி ரூபா பெறுமதியான பாதுகாப்பு உதிரிப்பாகங்களும் இதர கருவிகளும் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன; இது நிற்க வருடாந்தம் 33 கோடியே 20 லட்சம் டொலர் பெறுமதியான இராணுவ உபகரணங்கள் வருடாந்தம் இறக்குமதி செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

உலகின் நான்காவது பெரிய விமானப்படையாக இருக்கும் இந்திய விமானப்படைக்கே 60 சதவீதமான உபகரணங்கள் இறக்குமதி செய்யப்படுகின்றன.

நாட்டை ஆளும் தகுதியை
காங்கிரஸ் இழந்துவிட்டது

பி. ஜே. பி. குற்றச்சாட்டு

(டில்லி)

அயோத்தி பிரச்சினையில் அனைத்து நிலைகளிலும், அனைத்து வழிகளிலும் பொதுமக்களை ஏமாற்ற இ. காங்கிரசும், மத்திய அரசும் முயற்சித்து வருகின்றன.இவ்வாறு பாரதீய ஜனதாக்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

ஆந்திரா, கர்நாடகம், கோவா உட்பட மூன்று மாநிலங்களுக்கான தேர்தல் அறிக்கையை பாரதீய ஜனதா கட்சி வெளியிட்டுள்ளது. அதில் இக்குற்றச்சாட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது:

அத் தேர்தல் அறிக்கை மேலும் குறிப்பிடுகையில், இ. காங்கிரஸ் கட்சி நாட்டை ஆளும் தகுதியை தார்மீக ரீதியில் இழந்து விட்டது: காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க உரிய நடவடிக்கையை மத்தியில் ஆளும் இ. காங்கிரஸ் மேற்கொள்ள வில்லை, பொருளாதாரத் துறையில் ஏற்பட்டு வரும் இழப்பை சீர் செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. பாகிஸ்தானின் உளவு நிறுவனங்கள் மேற்கொள்ளும் சதித்திட்டங்களை முறியடிக்கவும் தவறிவிட்டது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

காபூலில் பீரங்கித்தாக்குதல்
12 ஆப்கானியர் பலி

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல் மீது நேற்று நடத்தப்பட்ட கடும் பீரங்கித் தாக்குதலில் 12 பேர் பலியாகினர் ஆப்கான் முன்னாள் பிரதமர் குல்புதீன் ஹெக்மதியார் படைகள் இத்தாக்குதலை நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

தலைநகரில் தற்போது ஐ. நா மேற்கொள்ளும் மத்தியஸ்த முயற்சிக்கு ஆதரவாக ஒருவார போர் நிறுத்தத்தை அனுசரிக்குமாறு ஜனாதிபதி ரபானி தம்முடைய படையினருக்கு ஆணையிட்டுள்ளார்.

பொலிஸ் - பொதுமக்கள்
தீமோரில் மோதல்

(ஜகார்த்தா)

கிழக்குத் தீமோரின் முக்கிய நகரமொன்றில் தீமோர் மக்களுக்கும், இந்தோனேசியப் பொலிசாருக்கும் இடையே அண்மையில் பெரும் மோதல் இடம்பெற்றுள்ளது.

கிறிஸ்தவதேவாலயம் ஒன்றினுள் புகுந்திருந்த சுபாட்சிகோரும், தீமோர் ஆர்ப்பாட்டக்காரர்கள் இந்தோனேசிய அரசை எதிர்த்து கோஷங்கள் எழுப்பியதுடன், சாதாரண உடையில் வந்த இரகசியப் பொலிசார் மீது கற்களை எறிந்து தாக்கினர்; இதனைத் தொடர்ந்து சம்பவம் நடந்த இடத்திற்கு ட்ரக் வண்டிகளில் விரைந்த பொலிசார் கண்ணீர் புகைகளை வீசினர். இரண்டு மணி நேரத்துக்கும் மேல் இம் மோதல் இடம் பெற்றதை தொடர்ந்து மக்கள் கலைந்து சென்றனர்.

சோமாலிய புயல்
30 பேர் பலி

சோமாலியாவின் வடக்கில் வீசிய கடும்புயலினால் 30 பேர் பலியாகினர். பெரும் பொருள் சேதமும் ஏற்பட்டுள்ளது.

உலக வர்த்தகத்தில்
யானை இறைச்சி

முயற்சியை தென் ஆபிரிக்கா கைவிட்டது

(பினா)

யானைஇறைச்சி, யானைத்தோல் என்பவற்றை உலக சந்தையில் அறிமுகப்படுத்தும் திட்டத்தை தென் ஆபிரிக்க அரசு கைவிட்டுள்ளது

தென் ஆபிரிக்காவின் இத் திட்டத்திற்கு மற்ற ஆபிரிக்க நாடுகளை எதிர்ப்பு கிளப்பியதைத் தொடர்ந்தே இத் திட்டம் கைவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது

ஹெயிட்டி முன்னாள் தலைவர்
நூல் எழுதுகிறார்

(பனாமா)

ஹெயிட்டியின் முன்னாள் இராணுவத் தலைவர் ரவுல் செட்ராஸ் தனது ஞாபகார்த்தம், நண்பர்கள், பாதுகாப்பு போன்ற அம்சங்கள் குறித்து நூல் ஒன்றை எழுதி வருகிறார்

பனாமா நகரமொன்றில் ஆடம்பர இல்லமான தளம் பரர் என்ற மாளிகையில் வசித்து வரும் முன்னாள் சர்வாதிகாரியான அவர் மூன்று ஆண்டுகள் பதவியில் இருந்தது குறிப்பிடத்தக்கது.

ஹெயிட்டியில் அமெரிக்க தலையீட்டை தொடர்ந்து தேர்தல் மூலம் தெரிவான அரிஸ்டைட் ஜனாதிபதி பதவி ஏற்றதை தொடர்ந்து ஜெனரல் செட்ராஸ் பனாமாவுக்கு சென்றிருப்பது தெரிந்ததே.

ஒவ்வொரு நாளிலும் பெரும்பகுதி நேரத்தை எழுதுவதிலேயே செலவிடும் ஜெனரல் செட்ராஸ் அபூர்வமாகவே வெளியே நடமாடுகிறார் எனவும் பத்திரிகைகளுக்கு பேட்டியளிக்க அவர் மறுத்து வருகிறார் எனவும் கூறப்படுகிறது.

புலிகளின் குரல்
நிகழ்ச்சி நிரல்

1994. 11. 22
செவ்வாய் இரவு

08. 01 - மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி-சி. கண்ணம்மா எழுதிய '' சுதந்திரப் போரின் சுவடுகள் ''
08. 20 - நலந்தானா நிகழ்ச்சியில்- '' கண்ணில் ஏற்படும் வெள்ளெழுத்து'' நோய்க்கு வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் ஆலோசனை வழங்குவார்
08. 30 - செய்திகள்
08. 40 - மாங்குளம்முகாம் தகர்ப்பு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி காயத்திரி எழுதிய '' விழ்ந்தது மாங்குளம் விடியலின் பாதையில் தெரிந்தது ஒளிதீபம் ''
09. 00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்;

1994. 11. 23
புதன் காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - நீங்கள் கேட்டவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - மாவீரர் வாரத்தையொட்டி சிறப்பு நிகழ்ச்சி-சி. கண்ணம்மா எழுதிய '' முன் னேற்றப் படிகளும் முலக்கருக்களும் ''
08. 00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

அரசு போர்நிறுத்தம் செய்யாததை ஐக்கிய தேசியக்கட்சி வரவேற்கிறது

எதிர்க் கட்சித் தலைவர் ரணில்

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் யுத்த நிறுத்தத்தை கோரியிருந்தனர் ஆனால் அரசு அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இவ் விடயத்தில் ஐ.தே.க. அரசை பாராட்டுகின்றது விடுதலைப் புலிகள் தொடர்ந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு நாம்பதில் நடவடிக்கை எடுக்கவேண்டும் என எதிர்க் கட்சித்தலைவரும் ஐ.தே.க தலைவருமான ரணில விக்கிரமசிங்க கொழும்பு பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

சிறிமா திசாநாயக்காவோ அல்லது கட்சியில் இருக்கும் வேறுயாரேனும்தங்களதுஎதிர்காலத்தை தாங்களே தீர்மானிக்க வேண்டும்

அவர் மேலும் தெரிவிக்கும் போது. ஹேமா பிரேமதாசாவுக்கும், சஜித் பிரேமதாசாவுக்கும் ஐதேக தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்றத்தில இடமளிக்குமாறு திருமதி திசாநாயக்கா கோரிக்கை விடுத்திருப்பது பற்றி நாங்கள் இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

செயலகத்தில் மாவீரர் கருத்தரங்கு

மாவீரர் நாள் கருத்தரங்கு இன்று பிற்பகல் 2.00 மணிக்கு செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறும். அலுவலர்கள் சகலரும் தவறாது உரிய நேரத்தில் சமுகம் தருவதுடன் இந்நிகழ்வு தொடர்பான தங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் தெரிவிக்குமாறும் இறுதி நிகழ்வாக யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி கருத்துரை வழங்குவார் என்றும் மேலதிக அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

விடுதலைபெற்ற அனைவரும் நற்பிரஜைகளாக விளங்க வேண்டும்

காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன்

(யாழ்ப்பாணம்)

''இன்று விடுவிக்கப்படும் கைதிகள் சமுதாயத்தின் நற்பிரஜைகளாக இருக்க வேண்டும் என்பதைத்தான் நாங்கள் எதிர்பார்க்கின்றோம்''.

இவ்வாறு நேற்று தமிழீழக் காவல்துறைப் பணிமனையில் நடைபெற்ற கைதிகள் விடுவிப்பு நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையில, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழீழ மாவீரர் வாரத்தை யொட்டி தமிழீழ தேசியத் தலைவர் வே பிரபாகரன் அவர்களின் பணிப்பின் பேரில் தான் இவர்கள் விடுதலை செய்யப்படுகின்றனர். அத்துடன் இவர்களுடைய குடும்பப் பின்னணியையும் பரிசீலித்து நாங்கள் இவர்களை விடுதலை செய்கின்றோம். இவர்கள் மீண்டும் குற்றச் செயல்களில் ஈடுபடமாட்டார்கள் என்று ஒரு நம்பிக்கை இருக்கின்றது. ஏனெனில் அதற்கான ஒரு சூழ்நிலையை வைத்துக்கொண்டு தான் இவர்களை விடுதலை செய்கின்றோம்.

மேலும் இவர்களுக்குத் தேவையான சில புனர்வாழ்வுப் பணிகளையும் நாங்கள் செய்து கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் என தெரிவித்தார் (பா,நி)

காமினி - டி.பி ஆதரவாளர்கள் புதிய கட்சி அமைக்கத்திட்டம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கா, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக உறுதியான நடவடிக்கைகளை முன்னெடுக்காமையை கண்டித்து மறைந்த காமினி திசாநாயக்காவினதும் முன்னாள் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவினதும் ஆதரவாளர்கள் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்றுபுதிய கட்சியொன்றை ஆரம்பிக்க திட்டமிட்டு வருவதாக யுக்திய சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது

புதிய கட்சியில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரமுகர்களையும் உறுப்பினர்களையும் இணைய வைப்பதற்காக இவர்கள் பிரசாரங்களில் ஈடுபட்டு வருதாக சிறிகோத்தா வட்டாரங்களை மேற்கோள் காட்டி யுக்திய மேலும் குறிப்பிட்டுள்ளது.

ஒக்டோபர் ஒளி வீச்சு இன்று காண்பிக்கப்படும்

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வெளியீடான ஒளி வீச்சு வீடியோ சஞ்சிகையின் ஒக்டோபர் மாதத்திற்கான ஒளி நாடா வெளிவந்துவிட்டது. ★ தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், ஸ்ரீலங்கா புதிய அரசுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சு வார்த்தை ★ முதல் பெண் புலியாக வீரமரணமடைந்த 2-ம் லெப். மாலதியின் 7-ம் ஆண்டு நினைவுநாள் நிகழ்ச்சிகள். ★ நீங்காத நினைவாக லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட பன்னிரு வேங்கைகள் பற்றிய விவரணம். ★ ''விடிவு'' என்னும் குறும் படம். ★ கலைநிகழ்ச்சிகள் என்பனவற்றோடு வழமையான பல அம்சங்களையும் தன்னகத்தே தாங்கி ஒக்டோபர் மாத ஒளி வீச்சு வெளிவந்துள்ளது.

இவ் ஒளி நாடா இன்றைய தினம் பி.ப 6-00 மணிக்கு யாழ் ஸ்ரீதர் திரையரங்கில் இலவச காட்சியாகக் காண்பிக்கப்படவுள்ளது என நிதர்சனம் நிறுவனத்தினர் தெரிவித்துள்ளனர்

பாதுகாப்பு அதிகரிப்பு

(கொழும்பு)

மலையகத்தில் ரி 56 துப்பாக்கிகள் கைக்குண்டு மற்றும் கைத்துப்பாக்கி என்பவற்றுடன் இளைஞர்கள் கைதானதைத் தொடர்ந்து தோட்டப் பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கைதான இளைஞர்கள் யாழ்ப்பாணத்தில் பயிற்சி பெற்றவர்கள் என்றும் இவர்களை விசாரிக்க கொழும்பிலிருந்து நுவரெலியாவிற்கு புலனாய்வு அதிகாரிகள் சென்றுள்ளதாகவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

தேர்தல் பிரசாரத்திற்கு சந்திரிகாவே அதிக பணம் செலவிட்டுள்ளார்

சண்டேரைம்ஸ் தகவல்

(கொழும்பு)

கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலின் போது தற்போதைய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவே அதிகம் பணம் செலவிட்ட நபர் என சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் வெளியான தகவல ஒன்று தெரிவிக்கின்றது.

தேர்தலுக்காக அவர் 2,685,214 ரூபாவை செலவிட்டுள்ளார். இவருக்கு அடுத்தபடியாக ஐ.தே.கவின் முன்னாள் போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் 2,587,381 ரூபாவை செலவிட்டுள்ளார். இவர்களில் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட காமினி திசாநாயக்கா தேர்தலுக்கென 1,051,340 ரூபாவை செலவிட்டுள்ளார். இதேசமயம் தேர்தலுக்கென கட்சி விளம்பரங்களுக்காக ஐ.தே.க. 20,450,995 ரூபாவையும் பொதஜன ஐக்கிய முன்னணி 4,918,134 ரூபாவையும் செலவிட்டுள்ளன.

இத்தொகைப்பணம் பொதுமக்கள் வரிப்பணம் மூலமே ஈடுசெய்யப்படுவதாக அப்பத்திரிகைகுற்றஞ்சாட்டியுள்ளது

பங்களாதேஷ் ஆவணங்களில் புலிகள் உக்ரேயினில் ஆயுதம் பெற்றனராம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு கப்பலின் மூலமாக கொண்டு வரப்பட்ட போராயுதங்கள், சோவியத் யூனியனிலிருந்து தனிக்குடியரசாகிய உக்ரேயினிலிருந்தே கொள்வனவு செய்யப்பட்டதாக சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் அச் செய்தியில்: பங்களாதேஷ் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ ஆவணங்களைச் சமர்ப்பித்து, உக்ரேயினிலிருந்து இந்த ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டதாகவும்,பங்களாதேஷுக்கு எனப் பெறப்பட்ட ஆயுதங்கள் புலிகளின் கைக்கு எவ்வாறு மாறின என்பது குறித்து சிறிலங்கா புலனாய்வு வட்டாரங்கள் விசாரணை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இக் கப்பலில், ஆயுதங்களுடன் ஆர். டீ. எக்ஸ் வெடிமருந்து பத்து தொன்களும் ரி என். ரி வெடிமருந்து ஐம்பது தொன்களும் ஏற்றப்பட்டிருந்தது எனவும், ஆழ் கடலில் வைத்து புலிகள் இவற்றை தங்களிடம் கைமாற்றியிருக்கலாம் எனக் கருதப்படுவதாகவும் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்மீது டிசம்பர் 15இல் விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் அரசியல் அமைப்பு, திட்டமிடல் அமைச்சராக இருந்த கே.என். சொக்ஸி, மின்சார சக்தி, வலுவள அமைச்சர் சந்திர பண்டார ஆகியோர் மீது முதலில் லஞ்சஊழல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் குறித்து விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளது.

டிசம்பர் 15-ம் திகதி இவ் விசாரணைகள் ஆரம்பமாகவுள்ளதாகவும் பல நூற்றுக்கணக்கான கோடி ரூபா கொடுக்கல் வாங்கல் தொடர்பாக இவ் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு 'ஹில்டன்'' ஆடம்பர விடுதி அமைத்தல் தொடர்பாக ஜப்பான் நிறுவனமொன்றிடம் கட்டடப் பொருள்கள் கொள்வனவு, விசாரணையில் முக்கிய இடம் பெறப்போவதாக தெரிவிக்கப்படுகிறது.

1-ம் ஆண்டுநினைவலைகள்



கப்டன் வெள்ளைத்தேவன்
(நியூட்டன்)
செல்வநாயகம் சசிகரன்
(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

தாயின் மடியில் 03 . 04 . 1975
தமிழுவர் மனங்களில் 22 . 11 . 1993

நியூட்டா---

நீ ஓடி மறைந்து ஓராண்டு ஆகியும்
தேடி அலைகிறோம் தினமும் உன்னை
வேங்கையென வீறுநடை போட்டாய்
வீழ்ந்திட்டாய் விடுதலைக்காய் - நியூட்டனே
மாவீரர் வரிசையில் இடம்பிடித்துவிட்டாய்
மறக்கமுடியவில்லை உன் நினைவலைகளை
உன் நாமம் என்றும் வாழும்.

22-11-93 அன்று அளவெட்டிப் பகுதியில் நடந்த நேரடி மோதலில் இவருடன் வீரச்சாவை எய்திய லெப். கதிரவன் (கிரிமாமா) அவர்களுக்கும் எமது முதலாம் ஆண்டு நினைவஞ்சலியை செலுத்துகிறோம்.

- குடும்பத்தினர்

உரும்பிராய் கிழக்கு,
ஞானவைரவர் வீதி,
உரும்பிராய்.

(சி-10755)

தான்வாழும்

படைத்து வருகிறார்கள்.

அதிலும் கடற்கரும்புலிகள் தமது மண்ணுடன் சேர்ந்து தமது மக்களின பாரம்பரியச் சொத்தான கடலும் எமது கையில் வரவேண்டும் என்பதற்காக தியாக வரலாற்றைப் புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இப்படியான மாவீரர்களை நினைவு கூரும் வகையில் அனுஷ்டிக்கப்படும் மாவீரர் வாரத்தை கடலோடும்-நிலத்தோடும் அன்றாடம் வாழ்வுக்காகவும் - வயிற்றுக்காகவும் போராடும் எமது தமிழின மக்கள் அனைவரும் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்க வேண்டும் என்று உளமார வேண்டுகிறோம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைவரின்

இவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

இவர்களில் 15 ஆண்களும் 18 பெண்களும் அடங்குகின்றனர்இவர்கள்குறிப்பாகசமூகச் சீர்கேடு,கசிப்புஉற்பத்தி,களவு போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களாவர். இதில் ஏற்கனவே குற்றச் செயல்களில் ஈடுபட்டு தமிழீழக் காவல் துறையினரினால்கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டு. திரும்பவும் குற்றச் செயல்களில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டவர்களும் அடங்குகின்றனர்.

மேலும் விடுதலை செய்யப்படும் கைதிகளுக்கு வேலை வாய்ப்பையும் அவர்களுக்கான சில புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் தமிழீழ காவல் துறையினர் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அத்துடன் தமிழீழ மாவீரர் வாரத்தை முன்னிட்டு வேறு ஏழு கைதிகளுக்கு தமிழீழக் காவல் துறையினர் தண்டனைக் காலத்தைக் குறைத்துள்ளனர் இதில் இரண்டு வருடங்களாக இருக்கும் கைதிக்கு ஒரு வருடமாகவும் - நான்கு வருடமாக இருக்கும் கைதிக்கு இரண்டு வருடமாகவும் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது. (பா,நி)

கப்பல் வடிவிலான மாவீரர் பந்தல் திறப்பு

(குருநகர்)

நேற்று முற்பகல் 11 மணிக்கு வலி கிழக்கு பிரதேச கடற்புலிகளின் மாவீரர் நினைவுப் பந்தல் யாழ். மாவட்ட கடற்புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு மு. வே. யோ. வாஞ்சிநாதனால் திறந்துவைக்கப்பட்டது.

திறப்பு விழா நாவாந்துறை வட்ட கடற்புலிகளின் பொறுப்பாளர் திரு. மதிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதற்கு முன்பாக காலை 9 மணிக்கு குருநகர் வட்ட கடற்புலிகள் பொறுப்பாளர் திரு. தேவநேசன் தேசியக்கொடியை ஏற்றி வைத்தார்.

55 அடி அகல கப்பல் தோற்றத்தைக் கொண்ட 80 அடி நீளப் பந்தலுள் நூற்றுக்கும் மேற்பட்ட வலி. கிழக்குப் பிரதேச மாவீரர்களின் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கு அவர்களின் பெற்றோர் ஈகச் சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தினர்.

அதனை அடுத்து நூற்றுக்கணக்கில் பொதுமக்கள மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் ஏறிப் பார்க்கும் விதத்தில் அமைக்கப்பட்டிடிருந்த கப்பல் மாதிரி முகப்பின் மீதும் ஏறிப் பார்வையிட்டனர். (21)

புலிகளுடனான

முக்கியமானது. இதை இராணுவம் முக்கியமானதொன்றாக கருத்திற்கொள்ளவில்லை. இராணுவ தலைமை சீர்குலைந்து வருகிறது.

1980 களில் மூத்த இராணுவ அதிகாரி ஒருவரிடம் யாழ்ப்பாணத்திலிருந்து எழுந்துள்ள அச்சுறுத்தல் பற்றிக் கேட்டபோது அவர், ''ஓ! அதுவா? கவலைப்பட வேண்டாம் அவர்கள் சாரம் கட்டிய சிறு பையன்கள் நாங்கள் மேற்குலகிலும் பிரிட்டனின் சான்ட்ஹேர்ஸ்ட் இராணுவ கல்லூரியிலும் பயிற்சிபெற்ற அதிகாரிகள்'' என்றார்

இதில் அரசியல்வாதிகளின் பெரும் தவறும் ஒன்று உண்டு. அவர்கள் இராணுவத்தின் உயர் பீடத்தில் உள்ளவர்களை பலவீனமாக வைத்திருக்கவே பார்த்தனர், இது இராணுவ புரட்சி ஒன்றை தவிர்க்கும் முகமாக அவர்கள் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை. இத்தகைய நடவடிக்கையால் அவர்கள் என்ன நடக்கப் போகின்றது என்பதை அறியும் திராணியற்றவர்களாக நடந்து விட்ட சம்பவங்களால் வழிநடத்திச் செல்லப்படுபவர்களாக இருந்தனர்.

தற்போதைய அரசின் சமாதான முயற்சிகளையிட்டு பாதுகாப்புத்துறையில் ஆச்சரியம் எழுந்துள்ளது. 1990 யூலையில் நடைபெற்ற சம்பவங்கள் இதற்கு காரணம்; விடுதலைப் புலிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா பேசுவதை இந்திய அரசு விரும்பவில்லை அதன் அதிருப்தியை புதுடில்லி தனிப்பட்ட ரீதியிலும் அறிவித்துள்ளது என அவர் அதில் மேலும் தெரிவித்துள்ளார்.

சகல

அட்டைகளைக் கொண்டுள்ள சகல குடும்பங்களையும் சேர்ந்த 5 வயது முதல் 18 வயது வரையான பாடசாலை மாணவர்களும் இந்த மாணவர் உணவு முத்திரையைப் பெறத் தகுதியுடையவர்களாக கணிக்கப்பட்டுள்ளனர். தற்போது யாழ் மாவட்டத்திலுள்ள அனைத்து கிராம சேவகர் பிரிவுகளிலும் இதற்கான விண்ணப்பங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இப்புதிய திட்டத்தின் கீழ் மாணவ உணவு முத்திரை பெறத் தகுதியுடைய நவாலி வடக்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட சகலரையும் இதற்கான விண்ணப்பப்படிவத்தைப் பெற்று பூர்த்தியாக்கி வரும் 24-ம் திகதிக்குமுன் சமர்ப்பிக்கும்படி நவாலி வடக்கு கிராம உத்தியோகத்தர் கேட்டுள்ளார். (05)

இடைக்கால

இந்த நிதி ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு சட்ட மூலம் தாக்கல் செய்யப்படாததால் இவ் இடைக்கால வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 8ஆந்திகதியன்று பாராளுமன்றத்தில் பூரண வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

புதிய பொலிஸ்மா அதிபராக மித்திர ஆரியசிங்க நியமனம்?

சிறிலங்காவின் புதிய பொலிஸ்மா அதிபராக மித்திர ஆரியசிங்க நியமிக்கப்படவுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது.

சிறிலங்காவின் முப்படைகள் மற்றும் பொலிஸ் திணைக்களம் ஆகியவற்றில் டிசம்பர் 15க்கு முன் பாரிய மாற்றங்கள் ஏற்பட இருப்பது தெரிந்ததே- புதிய அரசு இதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் தற்போது பொலிஸ்மா அதிபராக பதவி வகிக்கும் ஏர்னஸ்ட் பெரேராவின் பதவிக்காலம் அடுத்தாண்டு ஜூன் மாதத்துடன் முடிவடைகிறது இதனை அடுத்து இவரின் இடத்திற்கு இவருக்கு அடுத்தபடியாக இருக்கும் மித்திர ஆரியசிங்க நியமிக்கப்படலாம் என கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடும்ப அட்டைக்கு 5லீ மண்ணெய் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

குடும்ப அட்டைக்கு 5 லீற்றர் மண்ணெய் விதம் வழங்கப்படவுள்ளதாக திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் தெரிவித்துள்ளார்

மாகோ கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு கொண்டுவரப்பட்டு தற்போது இறக்கப்படும் மண்ணெய் குடும்ப அட்டைக்கு 5 லீற்றர் வழங்கப்பட இருப்பதுடன் 1 லீற்றர் 20 ரூபா விதம் வழங்கப்படவுள்ளது.

தற்போது இறக்கப்படும் மண்ணெய்யை நீர்வேலி அச்சுவேலி,புலோலி, உடுப்பிட்டி, பருத்தித்துறை, கட்டைவேலி கொடிகாமம், சாவகச்சேரி, மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பருத்தித்துறை இறங்குதுறையிலும் ஏனைய சங்கங்கள் யாழ் களஞ்சியத்திலும்பெற்று விநியோகிக்குமாறு திட்டப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

இன்று
சத்தியப்பிரமாணம்

ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க அரசின் கீழ் நியமனம் பெற்றுள்ள பிரதி அமைச்சர்கள் இன்று காலையில் அலரி மாளிகையில் ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்கவுள்ளனர் புதிய பிரதமரும் அமைச்சர்களும் கூட அலரி மாளிகையிலேயே பதவிப் பிரமாணம் செய்து கொண்டது தெரிந்ததே.

தலைமைய

பின்னடைவை ஏற்படுத்தக் கூடும் என கொழும்பிலுள்ள செய்தியாளர்கள் கருத்து வெளியிட்டு இருக்கின்றனர்.

யுத்தம்

குறுகிய காலத்தில் தளர்ந்து போயுள்ளன. இனப் பிரச்சினை தொடர்பான யுத்தம் தீவிரப்படுத்தப்படுவது இப்போது உறுதியாகி வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்,

தமிழீழ

வீதிவளைவுகள் அமைக்கப்பட்டு தேசிய விடுதலைப் போராட்ட வெற்றியை சித்தரிக்கும் பலவித தாக்குதல் வடிவங்களும் சித்தரிக்கப்பட்டுள்ளன. போராட்ட உணர்வை தூண்டும் வகையில் பலவித புரட்சிகர வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகள் வீதிகளின் குறுக்கே அசைந்து கொண்டிருக்கின்றன.

மாவீரர் வார முதல் நாளான நேற்று பல்வேறு இடங்களிலும் மாவீரர் ஆலயங்கள் திறந்துவைக்கப்பட்டன. வட்ட ரீதியாக மிகவும் பிரமாண்டமான முறையில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் ஆலயங்களில் அந்தந்த வட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களது உருவப்படங்களும் ஏனைய மாவீரர்களது உருவப்படங்களும் வைக்கப்பட்டு ஈகச்சுடரேற்றப்பட்டு மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டுள்ளன.

பெருந்திரளான பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் காலை முதல் நீண்ட வரிசையில் பலமணி நேரமாக மலர்களை கைகளில் ஏந்தியவாறுகாத்துநின்று வெற்றிக்கு தம்மை உரமிட்ட மாவீரர்களுக்கு மலரஞ்சலி செலுத்தியதைக் காணமுடிந்தது;

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.